Saturday
# மெயில்
01 - 43
24-07-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin



# முரளியின் முடிவை மாற்ற எங்களால் முடியவில்லை

## கூறுகிறார் மதி

கிரிக்கெட் உலகில் பந்து வீச்சில் தொடர்ந்தும் சாதனை படைத்து வரும் சுழற் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தொடர்ந்து விளை யாட வேண்டுமென விரும்பி யிருந்ததாக அவரின் மனைவி மதிமலர் கூறியுள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மாபெரும் பிரியாவிடை நிகழ்ச் சியின்போது மிகவும் பரபரப்பு டன் மதிமலர் காணப்பட்டார். ஆனால், முரளியின் இறுதி யான டெஸ்ட் போட்டியாக அன் றைய தினமிருந்ததால் அவர் துக்கத்துடன் காணப்பட்டதாகத் தென்படுகிறது. ‘இந்த டெஸ்ட் ஆட்டத்தின்போது ஒவ்வொரு பந்தையும் நான் அவதானித்துக் கொண்டிருந்தேன். காலையி லிருந்து மாலை வரை இங்கு இருந்து வருகிறேன். தனது திட்டங்கள் குறித்துப் பகிரங்கப்படுத்துவதற்கு முன்னர் என்னுடன் அவர் கலந் தாலோசித்திருந்தார். அவர் தொடர்ந்து விளையாட வேண்டுமென விரும்பி னேன். ஆனால், அவர் மனதில் தீர்மானத்தை மேற்கொண்டிருந் ததை நாங்கள் விளங்கிக்கொண்டபோது எங்களால் எதுவும் செய்ய முடியாது. தொடர் ஆட்டத்தில் முழுமையாகவாவது அவர் விளையாட வேண்டுமென நாங் கள் விரும்பியிருந்தோம். ஆனால் ஒன் றும் செய்வதற்கில்லை. தனது மனதில் தீர்மானத்தை அவர் எடுத்துக்கொண்டு விட்டால் எவர் சொன்னாலும் அதைக் கேட்கமாட்டார் என்று தனது தலையை அசைத்தவாறு மதிமலர் கூறியதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை தெரிவித்துள்ளது.



வியாழக்கிழமை விளையாட்டு உச்சக்கட் டத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது மதி மலர் உணர்வுபூர்வமாகக் காணப்பட்டார். தனது கணவன் உற்சாகமாக இருந்த வேளையில் அவருக்கு கைகளை அசைத்துக் காட்டிய போது மதிமலரின் உற்சா கம் மேலும் அதிகரித்தது. அவர்களின் நான்கு வயது மகனான நரேன் அந்தத் தருணத்தில் பார்த்து தனது தாயா ரின் பிடியிலிருந்து நழுவி ஓடினார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முரளி...

(முன்பக்கத் தொடர்ச்சி)

மதிமலர் இந்தியப் பெண்ணாவார். சென்னையிலுள்ள மலர் வைத்தியசாலையின் மறைந்த டாக்டர் எஸ். இராமமூர்த்தியின் மகளான மதிமலர் இப்போது உறுதியான இலங்கை விசிறியாக்க் காணப்படுகிறார். ஆம், 'பிரச்சினை எதுவுமில்லை. ஏற்கனவே சச்சினை அவதானித்துள்ளேன்' என்று அவர் கூறுகிறார். 2005 இல் முரளியை நான் திருமணம் செய்த பின்பு கிரிக்கெட்டை தீவிரமாகப் பார்க்கத் தொடங்கினேன். இலங்கை ஊடாகவே விளையாட்டைப் பற்றி நான் கற்றுக்கொண்டேன். இந்தியாவில் உங்கள் கணவனுக்கு நீங்கள் ஆதரவாக இருக்க வேண்டுமெனக் கற்பிக்கிறார்கள் இல்லையா? என்று மதிமலர் தெரிவித்தார். அவர் ஒரு இந்திய பட்டதாரி. மருத்துவர்கள் உள்ள குடும்பத்தில் தான் வேறுபட்ட துறையில் கற்றதாகக் கூறுகிறார். இலங்கைக்கு ஆதரவாக இருப்பதற்கான விதி எனக்கு இருப்பதாக நான் ஊகிக்கிறேன். எனது தாயார் (டாக்டர் நித்தியா சண்முகம்) இலங்கையுடன் தொடர்புகளைக் கொண்டவர். எமது திருமணம் குறித்து அவர் மகிழ்ச்சியடைந்திருந்தார். 2004 இல் முதல்தடவையாக முரளியைச் சந்தித்தேன்.இது கடல்கோளின் பின்னராகும். உடனடியாகவே எனக்கு அவரைப் பிடித்திருந்தது. அவர் மிகவும் உறுதியுள்ள மனிதர் என்று மதிமலர் கூறியுள்ளார்.

கிரிக்கெட் விடயங்களையோ அல்லது தனது பிரச்சினைகளையோ அவர் வீட்டுக்குக் கொண்டு வருவதில்லை. ஆனால், இந்தத் தடவை என்னுடன் கலந்தாலோசித்திருந்தார். இளைஞர்களுக்கு வாய்ப்பைக் கொடுக்க விரும்புவதாகவும் தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருக்கப் போவதில்லையெனவும் அவர் கூறினார் என்று மதிமலர் தெரிவித்தார்.மதிமலர் மீண்டும் முரளிக்குக் கையசைத்தார். அவரும் திரும்ப கைகாட்டினார். களத்திலிருந்தவாறு சகல வேளையிலும் அவர் அரைவாசிப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. அன்பும் பரிவும் நாங்கள் இங்கு பெற்றுக்கொண்டிருப்பது நினைத்துப் பார்க்க முடியாததொன்றாகும். நான் இலங்கையை மிகவும் நேசிக்கிறேன். நான் இங்கு வந்து இறங்கிய தருணத்திலிருந்து இதனை நேசிக்கிறேன். இந்த நாடு மிகவும் அழகானது. முரளி நெருக்கடியான காலகட்டங்களில் இருந்தபோதிலும் கூட இங்குள்ள மக்கள் அவருக்கு மிகவும் ஆதரவாக இருந்தார்கள் என்று மதிமலர் கூறினார்.

இடையில் நரேன் குறுக்கீடு செய்து கொண்டிருந்தார். அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார். அவர் 'ருவென்ரி-20' யை விரும்புகிறார் என்று மதிமலர் கூறினார். டெஸ்ட் ஆட்டங்களை நரேன் பார்க்க வேண்டுமென முரளி விரும்புவதாக மதிமலர் கூறுகிறார். ஆனால், மகன் மிகவும் குழந்தையென அவர் கருதுகிறார். மகன் கிரிக்கெட் விளையாடுவது முரளிக்கு விருப்பம் என்றும் அவர் தெரிவித்தார்.

மற்றொரு விக்கெட் வீழ்ந்தது. களத்தை நோக்கிப் பார்வையைச் செலுத்தினார் மதிமலர். இந்தியாவுக்கு கஷ்டமான காலம் இல்லையா? என்று கூறிய அவர் இலங்கை முரளியை தலறவிடும். அவரைப் பொறுத்தவரை இதுவொரு எண்ணிக்கைதான். ஆனால், அந்த 800 விக்கெட்டை அவர் பெற்றுக்கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன் என்று மதிமலர் தெரிவித்தார். இதனைக் குறிப்பிடும் போது 800 விக்கெட்டை எட்டுவதற்கு இன்னமும் இரண்டு விக்கெட் இருந்ததாக ரைம்ஸ் ஒவ் இந்தியா குறிப்பிடுகிறது.

## காது கேளாத பிரச்சினை



ஒருவன் தனது டாக்டரிடம் சென்று 'எனது மனைவிக்கு முன்னரைப் போன்று இப்போது செம்மையாகக் காது கேட்பதில்லை என்று நினைக்கிறேன்' என்று சொன்னார்.

'நான் சொல்கிற பரிசோதனையைச் செய்து பாருங்கள்' என்று கூறிவிட்டு டாக்டர் விளக்கமளித்தார்.

'உங்கள் மனைவி சமையல் அறையில் உணவு தயாரித்துக் கொண்டிருக்கும் போது 15 அடி தூரத்தில் நின்று அவரிடம் ஒரு கேள்வியைக் கேளுங்கள். அவர் பதில் சொல்லவில்லையென்றால் மேலும் நெருக்கமாகச் சென்று அதே கேள்வியைக் கேளுங்கள். அப்போதும் அவர் பதில் சொல்லவில்லையென்றால் மேலும் மேலும் நெருங்கிச் சென்று அவருக்குக் கேட்கும் வரை கேள்வியைக் கேளுங்கள்'.

அந்த மனிதர் வீடு சென்றதும் டாக்டர் கூறிய பரிசோதனையைச் செய்து பார்த்தார்.

மனைவி சமையல் அறையில் உணவு தயாரித்துக் கொண்டிருந்தார். இவர் 15 அடி தூரத்தில் நின்று 'இன்று இரவுக்கு என்ன சாப்பாடு' என்று கேட்டார். மனைவியிடமிருந்து பதில் வரவில்லை. சிறிது நெருக்கமாகச் சென்று 10 அடி தூரத்தில் நின்று மீண்டும் அதே கேள்வியை அவர் கேட்டார். அப்போதும் பதில் வரவில்லை. அடுத்து மேலும் நெருக்கமாகச் சென்று 5 அடி தூரத்தில் நின்று அதே கேள்வியைக் கேட்டார் அவர்.

அதற்கும் பதில் வரவில்லை. இறுதியாக மனைவிக்குப் பின்னால் நேரடியாக நின்று கொண்டு 'இன்று இரவுக்கு என்ன சாப்பாடு' என்று அவர் கேட்க மனைவியிடமிருந்து பதில் வந்தது;

'ஐயோ, கோழிக்கறி என்று நான்கு தடவைகள் கூறி விட்டேன்'.

## சோர்வுக்கு மருந்து



**நோயாளி:** டாக்டர் எனக்குப் பெரும் கவலையாக இருக்கிறது. தினமும் மாலையில் அலுவலகத்தில் கடமையை முடித்து விட்டு வீடு திரும்பிச் செல்லும் போது களைப்பாகவும் சோர்வாகவும் இருக்கிறது.

**டாக்டர்:** ஆம், அப்படியா? அதற்காக ஒன்றும் கவலைப்பட வேண்டாம். இரவுச் சாப்பாட்டுக்கு முன்னதாகச் சிறியளவில் மதுபானத்தை அருந்துங்கள். உடலுக்கு நன்றாக இருக்கும். காலையில் நேரகாலத்துடன் நித்திரை விட்டு எழும்பவும் முடியும்.

**நோயாளி:** நன்றி டாக்டர். ஆனால், முன்னர் உங்களை நான் பார்க்க வந்தபோது மதுபான வகைகளை அருந்துவதை முற்றாக நிறுத்தி விடவேண்டுமென்றல்லவா ஆலோசனை கூறினீர்கள்.

**டாக்டர்:** ஆம், அப்போது நான் அப்படித்தான் சொன்னேன். அது கடந்த வரத்தைய சமாச்சாரம். அதற்குப் பிறகு மருத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ பெரும் முன்னேற்றங்களைக் கண்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

பொய் பேசி ஏமாற்றும் அரசியல்வாதிகளை தெரிவு செய்தது போலவே அவர்களை தோற்கடிக்கவும் மக்கள் தயங்கக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மாத்தறை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றம் தெரிவாகியுள்ள புதிய எம்.பி. புத்திகபத்திரன தெரிவிக்கிறார்.

*Saturday* மெயிலுக்கு வழங்கிய சிறப்பு பேட்டியிலேயே அவர் இந்த கருத்தை வெளியிட்டார். அவர் வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு;

**கேள்வி: உங்களது குடும்பம், கல்விப் பின்னணி பற்றி?**

**பதில்:** எனது தந்தை ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்.தாய் ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், சகோதரி ஒருவர் மட்டும் இருக்கிறார். அவர் ருகுணு பல்கலைக் கழக நூலக பொறுப்பாளராக இருக்கிறார். மாத்தறை ராஹுல கல்லூரியில் நான் எனது பாடசாலை கல்வி நடவடிக்கைகளை மேற் கொண்டேன். இதன் போது ஜனாதிபதி சாரணர், இளைய செஞ்சிலுவைச் சங்கத்தின் மாத்தறை மாவட்ட முதன்மை செயலாளர், கல்லூரியின் விவாத அணித் தலைவர்,பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவன் போன்ற பல பதவிகளை வகித்தேன். எனது உயர்கல்வியை களனி பல்கலைக்கழகத்தின் இறாகமை மருத்துவ பீடத்தில் மேற் கொண்டேன். அதன் பின்னர் 9 வருடங்கள் ஊடகத் துறையில் பணியாற்றினேன். இந்தக் காலத்தில் ரீ.என்.எல்., சிரச போன்ற தொலைக் காட்சிச் சேவைகளில் அரசியல் நிகழ்ச்சி தொகுப்பாளராக பணியாற்றினேன். 2009ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தென் மாகாண சபைத் தேர்தலில் (மாத்தறை மாவட்டத்தில்) போட்டியிட்டதே எனது அரசியல் பிரவேசமாக அமைந்தது.அதில் மாத்தறை மாவட்டத்தில் எனக்கே அதிக விருப்பு வாக்குகள் கிடைத்தன. 2006 ஆம் ஆண்டில் சிறந்த இளம் அரசியல்வாதிக்கான விருதும் எனக்கு கிடைத்தது. 2009 ஆம் ஆண்டில் மீண்டும் தென் மாகாண சபைக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றேன். இதன் மூலம் தென்மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமிக்கப் பட்டேன்.இதனையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு முதல் தடவையாக பாராளுமன்றம் தெரிவானேன்.



'பொய் பேசும் அரசியல்வாதிகளை தோற்கடித்துவிடுங்கள் என்பதே மக்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்'

**கேள்வி: உங்களது அரசியல் பிரவேசத்துக்கான காரணமாக அமைந்தது என்ன?**

**பதில்:** சில காலம் வைத்தியராகவும் நீண்ட காலம் ஊடகவியலாளராகவும் பணியாற்றியதன் மூலம் மக்களின் பிரச்சினைகளை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.அத்துடன் கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் விட்ட தவறுகளே இந்த பிரச்சினைகளுக்கு காரணம் என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது. எனவே பிரச்சினைகள் பற்றிக் கேள்வி எழுப்புகிற இடத்திலிருப்பதை விட அதைத் தீர்த்து வைக்க வேண்டுமென்ற எண்ணமே எனது அரசியல் பிரவேசத்துக்கு காரணமாக அமைந்தது.

**கேள்வி: அரசியலில் உங்களது நோக்கம் என்ன?**

**பதில்:** மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே எனது நோக்கம் நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தாலுமே அரச சார்பற்ற நிறுவனங்கள், உதவி வழங்குவோர், நிறுவனங்கள் போன்றோர் ஊடாக மக்களுக்கான பல உதவிகளை மேற் கொண்டே வருகிறேன்.

**கேள்வி: இளம் எம்.பி.என்ற வகையில் அரசியலில் நீங்கள் எட்ட விரும்பும் இலக்கு என்ன?**

**பதில்:** இந்த இடத்தில் சென்று நிற்க வேண்டும் என்ற இலக்கு எதுவும் எனக்குக் கிடையாது. மக்களுக்காக சேவை செய்ய வேண்டும் என்பதே எனது நோக்கம். நான் கட்சியையும் மக்களையுமே நம்புகிறேன்.அதேபோல் கட்சியையும் மக்களையும் பாதுகாப்பதே எனது கடமை. அதற்காக நான் செயற்படும் போது மக்கள் என்னை தகுந்த இடத்தில் வைப்பார்கள்.

**கேள்வி: முதலாவது பாராளுமன்ற அமர்வு அனுபவம் எப்படி இருந்தது?**

**பதில்:** பாராளுமன்றத்தில் நான் கன்னி உரையாற்றிய போது சற்று பதற்றமாகவே இருந்தது.அச் சந்தர்ப்பத்தில் நான் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன். ஏனெனில் நான் இந்த நிலைக்கு வருவதற்கு ஏனையவர்கள் போல் என்னிடம் பண வசதிகள் இருக்கவில்லை. கஷ்டப்பட்டு சம்பாதித்த மக்களின் உதவியுடனேயே நான் இன்று இந்த இடத்திற்கு வந்திருக்கிறேன்.அவர்கள் பற்றி நான் எந்த தருணத்திலும் அக்கறை கொண்டுள்ளேன்.

**கேள்வி: தற்போதைய பாராளுமன்ற செயற்பாடுகள் திருப்தியளிக்கின்றனவா?**

**பதில்:** கவலையாகவே இருக்கிறது.சிலரது செயற்பாடுகள் குறித்து திருப்திப்பட முடியாது.பாராளுமன்றத்தில் பேசும், செயற்படும் ஒவ்வொரு விநாடிகளிலும் மக்களின் பணமே செலவிடப்படுகின்றது.எனவே அந்த நேரத்தை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். ஒரு சிலரது செயற்பாடுகள் அங்கு மிகவும் கவலைக்குரியதாகவே இருக்கிறது.

**கேள்வி: அரசியல் தவிர்ந்த வேறு ஏதேனும் துறையில் ஈடுபடும் ஆர்வம் இருக்கிறதா?**

**பதில்:** இல்லை.நான் முழுநேர அரசியல்வாதி என்பதால் அரசியலில் மட்டுமே கவனம் செலுத்துகிறேன்.

**கேள்வி: இளம் தலைமுறை எம்.பி. என்ற வகையில் மக்களுக்கு நீங்கள் வழங்கும் செய்தி?**

**பதில்:** அரசியல்வாதிகள் பற்றி மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாத,பொய் பேசும்,ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல்வாதிகளை தெரிவுசெய்தது போலவே,தோற்கடித்தும் விடுங்கள் என்பதே மக்களுக்கு நான் வழங்கும் செய்தி.

டிட்டோகுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்தியாவிலேயே கூடுதல் எண்ணிக்கையில் பாலியல் தொழிலாளர்கள்

இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 688,751 பாலியல் தொழிலாளர்கள் இருப்பதாகவும் இவர்கள் பரவக்கூடிய பாலியல் நோய்கள் தொடர்பில் சுகாதார அத்தாட்சிப்பத்திரத்தை பெற்றிருக்க



வேண்டிய கட்டாயம் இல்லை என்று மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கிறது.

தகவலைப் பெறுவதற்கான உரிமையின் அடிப்படையில் வேத்பால் என்ற டில்லிவாசியொருவர் பாலியல் தொழிலாளர்கள் தொடர்பிலான தகவல்களை சுகாதார அமைச்சிடம் கோரியிருந்தார்.அதற்கு அளித்த பதிலிலேயே அமைச்சு மேற்கண்ட விபரத்தைத் தெரிவித்திருக்கிறது.

இந்தியாவில் எயிட்ஸ் நோய் பரவுவதற்கு பிரதான காரணியாக விபசாரமே விளங்குவதால் மேற்கண்ட தகவல் எயிட்ஸ் நோயைத் தடுப்பதற்கான இயக்கங்களை முன்னெடுக்கும் அமைப்புக்களுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அரசாங்கத்துக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் விபரங்களின் படி தென்மாநிலங்களிலேயே பெரும் எண்ணிக்கையான பாலியல் தொழிலாளர்கள்,இது விடயத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பாலியல் தொழிலாளர்களுடன் ஆந்திரப் பிரதேச மாநிலமே முன்னணியில் இருக்கிறது.கர்நாடகாவில் சுமார் 79 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட பாலியல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.மூன்றாவது,நான்காவது,ஐந்தாவது இடங்களில் முறையே தமிழ்நாடு மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் இருக்கின்றன.

டாட்ரா-நாகர் வேலியிலும் டமான்டியூவிலும் ஒரு பாலியல் தொழிலாளி கூட இல்லை என்றே சுகாதார அமைச்சின் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.ஜம்மு காஷ்மீர் மாநிலம் மிகவும் குறைந்த எண்ணிக்கையான பதிவு செய்யப்பட்ட பாலியல் தொழிலாளர்களைக்(259)கொண்டிருக்கிறது.

நகரங்களைப் பொறுத்தவரை தலைநகர் டில்லியே கூடுதல் எண்ணிக்கையான பாலியல் தொழிலாளர்களைக் கொண்டிருக்கிறது.டில்லியில் பகிரால்சத்தில் தெரிந்த ஒரேயொரு சிவப்பு விளக்குப் பகுதியே (ஜி.பி.ரோட்) இருக்கின்ற போதிலும் அங்கு 37,900 பாலியல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.இந்தியாவின் வர்த்தகத் தலைநகர் என்று வர்ணிக்கப்படும் மும்பையை விடவும் டில்லியில் கூடுதல் எண்ணிக்கையில் பதிவு செய்யப்பட்ட பாலியல் தொழிலாளர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்திடம் இருக்கக் கூடிய பதிவுகளில் இடம் பெறாமல் பெரும் எண்ணிக்கையான பாலியல் தொழிலாளர்கள் இருப்பதாக நம்பப்படுகிறது.தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி இந்தியாவில் 12 இலட்சத்து 63 ஆயிரம் பாலியல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

மாநிலங்களில் செயற்படும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் சுகாதார அமைச்சின் கணிப்பீடு அமைந்திருக்கிறது.

பாலியல் தொழிலாளர்களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை சமுதாயத்தின் பொதுப்போக்கில் இணைப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தன்னால் கேட்கப்பட்ட கேள்விக்கு சுகாதார அமைச்சிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை என்று வேத் பால் தெரிவித்திருந்ததாக ரைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிக்கை செய்தி வெளியிட்டிருக்கிறது.நிதி நெருக்கடியினால் பாலியல் தொழிலுக்குள் தள்ளப்பட்ட பெண்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டியது கட்டாயமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்திய மத்திய சுகாதார அமைச்சின் எயிட்ஸ் கட்டுப்பாட்டு இலாகாவின் வருடாந்த அறிக்கையில் வெளியிடப்பட்ட தகவல்களின்படி உலகில் எச்.ஐ.வி. எயிட்ஸின் தொற்றுக்கு இலக்காகியிருப்பவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை இந்தியா மூன்றாவது இடத்தில் (22 இலட்சத்து 7 ஆயிரம் பேர்) இருக்கிறது.இந்தியாவில் இருக்கக்கூடிய பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கை மொத்த ஜனத்தொகையில் 0.5 சதவீதமாக இருக்கின்றபோதிலும் எச்.ஐ.வி.யின் தொற்றுக்கு இலக்காகியிருப்பவர்களில் 7 சதவீதத்தினர் பாலியல் தொழிலாளர்களாக இருக்கிறார்கள்.

## வேலையில் மூழ்கியவருக்கு நேர்ந்த விபரீதம்



ஒரு உயர்ந்த கட்டிடத்தின் 19 ஆவது மாடியில் உள்ள அலுவலகத்தில் ஒருவர் கடுமையாக வேலை செய்து கொண்டிருந்தார். தொடர்ச்சியாக வேலை செய்ததில் அவர் மிகவும் மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருந்தார்.

அங்கு ஓடி வந்த ஒரு பையன் 'மிஸ்டர் ஜோன் உங்கள் மகள் ஆன் இந்தக் கட்டிடத்துக்கு முன்பாகவுள்ள வீதியில் வாகன விபத்தில் இறந்து போய்விட்டாள்' என்று கூறினான்.

உடனே அவர் பதறியடித்துக் கொண்டு என்ன செய்வதென்று அறியாது தனது அலுவலக ஜன்னலூடாகப் பாய்ந்தார்.

கீழ் நோக்கி வந்து கொண்டிருந்தபோது 14 ஆவது மாடிக்கு அண்மித்ததாக வந்ததும் தனக்கு ஆன் என்ற பெயரில் மகள் ஒருத்தி இல்லை என்பது அவருக்குத் தெரியவந்தது. 7 ஆவது மாடிக்கு அண்மையாக வந்ததும் இன்னமும் தான் திருமணம் செய்யவில்லை என்பது அவரின் நினைவுக்கு வந்தது.

நிலத்தில் விழுவதற்கு முன்னதாகத் தான் அவருக்குத் தெரியவந்தது தனது பெயர் ஜோன் இல்லை என்பது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கு கல்வி விற்கப்படும்



மாணவர்களின் அறிவுத்திறனை ஒளிரச் செய்யும் இடமாகவும் பல்திற ஆற்றல்களையும் வளர்க்கும் இடங்களாகவுமுள்ள கல்வி நிலையங்கள் இன்று வணிக நிறுவனங்களாக மாறிவிட்டன.

'கல்வி வள்ளல்கள்' என்ற மோசடிப்பெயருடன் கல்வியை வணிக முதலைகள், கல்வி நிறுவனங்களில் முதலீடு செய்து இலாபமீட்டிக் கொள்வதற்காக மாணவர்களின் பணத்தில் விளையாடுகின்றனர்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஆரம்பிக்கும் போது 'குறிப்பிட்ட காலப்பகுதியில் கல்வி நிலையங்களிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு விசேட கழிவு' என்று குறிப்பிடப்பட்டிருந்தும் பிரபல கல்வி நிறுவனங்களில் அவ்வாறு கழிவுகள் வழங்கப்படுவதில்லையென தாயொருவர் கவலையுடன் கூறினார்.

மேலும் பாடசாலையில் குறிப்பிட்ட காலத்தினுள் பாடங்களை நிறைவேற்ற முடியாதுள்ளதால் தனியார் வகுப்புகளில் சேர்த்து எனது மகளை படிக்க வைக்க ஆசையாக இருந்தும் தனியார் கல்வி நிலையங்களில் ஒவ்வொரு பாடங்களுக்கும் கேட்கும் பணத்தினை கட்ட முடியாதுள்ளதாக இன்னொரு தாயார் கூறினார்.

அரச, அரச சார்பற்ற கல்வி நிறுவனங்களின் நிலைமை குறித்து ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் வாதங்கள் நடைபெறுகின்ற போதும் கல்வி வணிகச் சந்தைகள் உச்ச கட்டத்தில் உள்ளது.கல்விக்கட்டணம்,நுழைவுத் தேர்வு, தகுதி மதிப்பெண் என்பன இன்று சந்தையில் விற்கும் பொருட்களாக மாறியுள்ளது.

முதலாமாண்டுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான புதிய சுற்று நிருபம் அண்மையில் கல்வியமைச்சர் பந்துல குணவர்தனவினால் வெளியிடப்பட்டபோதிலும் ஏனைய வகுப்புகளிலும் உயர் தரத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கும் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு அறவிடும் தொகையும் அதிகமாக காணப்படுவதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் வெள்ளவத்தையிலுள்ள கல்வி நிலையத்தில் தனது மகனை அனுப்பிவிட்டு வாசலில் நின்ற தாயொருவர் 'இந்தக் கல்வி தாபனத்தில் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள் பிரபலமானவர்கள் என்பதால் அதிகளவு பணம் செலவானாலும் பரவாயில்லை என சேர்த்தேன். இருந்தும் தாங்கள் பெறும் பணத்திற்கேற்றவாறாவது பாடங்களை கற்பிப்பதில் ஆசிரியர்கள் அக்கறை காட்டுவதில்லை. ஏனெனில் உதாரணமாக ஒரு பாடத்திற்கு இந்தக் கல்வி நிலையத்தில் 1 1/2 மணித்தியாலங்கள் கொடுக்கப்படுகின்ற போதும் சரியாக 50 நிமிடங்களில் ஒரு மணித்தியாலத்தினுள் நிறுத்தி விடுவார். ஆனால் குறிப்பிட்ட திகதியினுள் பணம் செலுத்தாவிடின் வகுப்பறையுள் அனுப்ப மாட்டார்கள்' எனக் கூறினார்.

புதிய பாடத்திட்ட முறையினுள் தரம் 4 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களின் பாடங்கள் முன்னரை விட அதிகரித்துள்ளமையால் ஒரு நாளினுள் அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்க முடியாத நிலையில் பாடசாலைகள் காணப்படுகின்றன. இதனால் தான் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை நாடிச் செல்கின்றனர்.

எனவே மாணவர்களின் நலன் கருதி குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தை அறவிடக் கூடியவர்களாக தனியார் கல்வி நிலையங்கள் செயற்படுமிடத்து ஏழை-பணக்காரன் என்ற வர்க்க பேதமின்றி அனைத்து மாணவர்களுக்கும் இலகுவாக கல்வியைத் தொடர முடியும்.

உயர்தர வகுப்பில் விஞ்ஞானப்பிரிவில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் கூறுகையில் 'நான் சாதாரண குடும்பத்தில் பிறந்தவள். எனக்கு இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியுமுள்ளனர்.நாங்கள் 4 பேரும் பாடசாலை செல்கிறோம்.

தந்தை கூலி வேலை செய்துதான் எங்கள் படிப்புக்காக பணம் தருவார்.

எனக்கு மாதாந்தம் 1000 ரூபா பெறுமதியான புலமைப் பரிசில் கிடைக்கிறது.இருந்தும் எனது கல்வி செயற்பாடுகளுக்கு போதாமலுள்ளது.

தனியார் கல்வி நிலையங்களில் விஞ்ஞானப் பிரிவிற்கு விசேட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். மேலும் உயர்தரம் என்பதால் பாடசாலையில் மாத்திரம் கற்பது போதாமலுள்ளதால் அனைத்துப் பாடங்களுக்கும் வெளியே சென்று கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியார் கல்வி நிலையங்களில் ஒவ்வொரு பாடத்துக்கும் ஆயிரம் ரூபாவிற்கு அதிகமாக கேட்பதால் தொடர்ந்தும் படிக்க முடியாத நிலையிலுள்ளேன். எனது தம்பி, தங்கைகளும் பாடசாலை செல்வதால் தந்தையின் பணத்தை எனக்கு மட்டும் செலவழிக்க முடியாதுள்ளது.

எம்மைப்போன்ற சாதாரண குடும்ப மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு தனியார் கல்வி நிலையங்கள் அறவிடும் பணத்தை குறைப்பார்களாயின் எதிர்கால இலட்சியம் நிறைவேறும்' என்றார்.

எதிர்கால தலைவர்களாகிய இளையோரின் கல்வியில் அரசுக்கு பொறுப்புள்ளதால் கல்வி நிறுவனங்களிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் புதிய செயல்முறைகளை உருவாக்க கல்வியமைச்சு முன்வர வேண்டும்.இதன் மூலம் அனைத்து மாணவர்களும் இலகுவாக கற்கக் கூடிய நிலை ஏற்படும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வயிற்றுவலிக்கு விசமியாகும் வலி நிவாரணி

வயிற்றுவலி என்றால் என்ன வலி நிவாரணி இருக்கே என்ற காலம் போய் விட்டது. வலி நிவாரணிகள் செய்யும் துரோகத்தனத்தை பற்றித்தான் சொல்லப்படுகி றது.

வலி இருந்தால் தான் வலிமை பிறக்கும் என்று பாடல்களும் கவிதைகளும் சொல்கின்றன. ஆனால் இங்கு வலி இல்லை என்றால் வருத்தம் இனங்காணப்ப டாது என்று தான் மருத்துவம் சொல்கிறது. வலி என்றால் சும்மா சின்ன விடயமில்லை. அதில் கூட ஆயிரம் வகை. அப்படித்தான் வலி கூட பலவகைப்படுகிறது. அது வும் இடத்துக்கு இடம், கால அளவு, தன்மை, ஒழுங்க மைப்பு, வலியைக்குறைக்கும் நடைமுறைச் செயற்பாடுகள் இன்னும் இதர அறிகுறிகள், வலி தீவிரமாகும் விதம் இப் படி ஒரு தொகை விடயங்கள் ஒரு வலியுள் இருக்கிறது. இவற்றை வைத்துக் கொண்டு வலியின் மூலத்தைக் காண டாக்டர் கேட்கின்ற கேள்வி கள் அமைகின்றன.

வலி என்பது நோயல்ல. நோயின் ஓர் அறி குறியே. வலி எதனால் உருவாகிறது என்றால் சில அங்கங்களில் ஏற்படும் அழற்சி, சில அங் கங்களில் ஏற்படும் அடைப்பு, சில அங்கங்கட்கு குருதி விநியோகம் தடைப்படுவதால் இன்னும் சில அங்கங்கள் வீங்குவதால் இப்படிப் பலவித மாகின்றது.

வலியின் இடத்தைப் பொருத்து வயிற்றின் வலது கீழ்ப்புறம் வலி இருப்பின் உதாரணமாக குடல்வளரியில் அழற்சி அல்லது அது சார்பாக வலது மேற்புறத்தில் இருப் பின் உதாரணமாக பித்தப் பையில் நோய்நிலை தென் படலாம். இவ்வாறு வலியும் அதன் இடமும் கூட முக்கியம் பெறுகின்றது. இன்னும் வலியின் வகையைக் கொண் டும் இது எந்த அங்கத்திற்கு உரியது என்று வரையறை கூற முடியும். இதைவிட வலி யானது அதன் பரவுகையைக் கொண்டும் எந்த அங்கத் தைச் சார்ந்தது என்று வரை யறுக்கப்படுகி றது. அனேக மாக சதையில் ஏற்படும் நோய் நிலை வலி முதுகை ஊடறுப்பது போன்று அமை யும். அதைவிட சிறுநீர் கற் களாயின் வலி நாரிப்பகுதி தொடங்கி கவடுகள் மற்றும் தொடை வரை கூட பரவுவ தாக சிறுநீர்க்கல்லின் அமை விடத்தைக் கொண்டு வேறுப டும்.




இவையெல்லாம் வலியை வைத்துக் கொண்டு வலியின் மூலத்தை அறிதலேயாகும்.

சிலவகை வலிகள் சில அங்கத்திற்குரியவை. தும்மும் போது, இருமும் போது கூட அதிகரிக்கலாம். அவ்வாறே குடற்புண் சார்பான வலிகள் உணவு உண்ணுதலுடன் குறைவடையும் அல்லது மிகையடையும் தன்மை கொண்டு இருக்கலாம். இவ் வாறு வலியை அறிய வலி யின் இயல்புகள் கொண்டு வரையறை செய்யப்படுகின் றது. இவ்வாறு பட்ட வலியை உணரமுடியாது வலிநிவார ணிகள் கொண்டு மூடிமறைப் பது எப்படி நியாயம்.

வலி தெரியாவிடின் வருத் தம் தெரியாதே. நோய் நிலை அறியப்படாதுவிடின் வலி யின் மூலம் இனம் காணப்ப டாது. ஆகவே வலி நிவாரணி உடலில் காணப்படும் காலம் தாண்டியதும் வலி மீளவும் உருவாகும். ஆனால் வலி ஏற் படும் போது உடலில் எங்கோ ஓர் இடத்தில் பெரும் தவறு நிகழ்கின்றது. கிருமித்தொற்று என்றால் சற்று யோசியுங் கள் பார்ப்பம். கிருமி தன்னை பெருக்கிக் கொண்டு பெருமெ டுப்பில் வலியை உண்டுபண் ணும் நிகழ்வை வலிநிவாரணி கள் உண்டு பண்ணுகின்றன.


உதாரணமாக குடல் வளரி யில் ஒரு தொகை கிருமிகள் காணப்படும். இவை குடல் வளரி அழற்சியுற்று வெடிக் கும்போது உடற்குழியில் விடுவிக்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் கிருமி உட்கு ழியில் பல்கிப்பெருகி நோய்நி லையை மோசமடையச் செய் யும். ஆனால், வலிநிவாரணி கள் என்ன செய்யும் வலியை உணராது தடுப்பதை மட்டுமே செய்கின்றன. கிருமியுடன் எந்த ஒரு தாக்கத்தையும் செய் வதில்லை.

இப்போது சொல்லாமலே புரியும் துரோகத்தனம் இது தான். வலிநிவாரணிகள் செய்வன எல்லாம் என்று அப் படியே முழுத்துரோகம் என்று எனினும் சிலநோய் நிலை களில் வலி நிவாரணிகளை பயன்படுத்தினாலும் பாதிப்பு ஏற்படுவதில்லை. ஆனால் மேற்படி நிலை போன்ற நேரங்களில் வலிநிவாரணி களால் நோய் இனம் காணப்ப டாது நோயாளி பரிதாபமான நிலையை அடைவதற்கு வலி நிவாரணிகள் காரணமாகின் றன.



டாக்டர்
வெ.நாகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிய முதியவர்களுக்கு ஆபத்து

ஆசியாவில் இருக்கும் நாடுகளில் செல்வவளம் அதிகரித்து வந்தாலும் அங்கு இறக்கும் தருவாயில் இருக்கும் மக்களைப் பல நாடுகள் போதுமானளவில் கவனிப்பதில்லை என ஒரு ஆய்வு கூறுகிறது.

லண்டனிலிருந்து வெளியாகும் எகனாமிஸ்ட் பத்திரிகையின் ஒரு அங்கமான எகனாமிஸ்ட் இன்ரலியன்ஸ் யுனிற் வாழ்க்கையின் இறுதி நிலையில் இருப்பவர்களுக்கான கவனிப்புகள் ஆசியாவில் மோசமான நிலையில் இருக்கின்றன என்று தெரிவித்துள்ளது.

இந்தியா உட்பட உலகின் நாற்பது நாடுகளின் நிலைமை குறித்து நடத்தப்பட்ட இந்த ஆய்வில் முதலிடத்தில் பிரிட்டனும் கடைசி இடத்தில் இந்தியாவும் இருப்பதாகத் தெரியவந்துள்ளது என்று அந்த ஆய்வு கூறுகிறது. சீனா மற்றும் தென்கொரியாவிலும் இதே

நிலைதான். அங்கும் இறக்கும் தருவாயில் இருக்கும் மக்களுக்கான கவனிப்பு மோசமாகவே இருக்கின்றது எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

செல்வந்த நாடான ஜப்பானோ 40 நாடுகளின் பட்டியலில் 23 ஆவது இடத்தில் இருக்கின்றது.

ஆசியாவில் இறக்கும் தருவாயில் இருக்கும் மக்கள் சரியானளவில் கவனிக்கப்படாமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். அதிலே முக்கியமானவை அங்குள்ள கலாசாரமும் பிறப்பு,இறப்பு,சொத்து, நோயின் பாதிப்புகள் போன்ற காரணங்களைக் கொண்டு மக்கள் தொகை குறித்து ஆய்வு நடத்தும் முறையும் அடங்கும்.

அரசின் நிதியுதவி இல்லாத நிலையிலும் அதற்கான யுக்திகள் வகுக்கப்படாத நிலையிலும் முதியவர்களைக் கவனித்துக்கொள்வது என்பது சமூகங்களையே சார்ந்துள்ளது.

ஆசியாவில் முதியவர்கள் கவனிக்கப்படுவதில்லை. உதாரணமாக சீனாவில் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தைதான் என்கிற கொள்கையானது அங்கு முதியவர்களைக் கவனித்துக் கொள்வதற்கு மிகக் குறைந்தளவே இளையவர்கள் இருக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

இந்தியாவிலோ பிரச்சினை வேறுமாதிரி உள்ளது. அங்கு இளையவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. ஆனாலும் அவர்கள் வளமான வாழ்க்கையைத் தேடிக் கிராமப்புறங்களிலிருந்து நகர்புறங்களுக்கு இடம்பெயர்வதால் கிராமங்களில் தங்கியுள்ள முதியவர்களைக் கவனிக்க முடியாத நிலைக்கு வழிவகுத்துள்ளது. ஜப்பானில் செல்வச்செழிப்பு இருந்தாலும் அங்கு கவனிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கும் முதியவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கின்றது.

இதற்கெல்லாம் அப்பாற்பட்டு சீனா,இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய இந்த மூன்று நாடுகளிலுமே நோய் முற்றி மரணத்தின் விளிம்பில் இருக்கும் நிலை குறித்தோ அல்லது இறப்புக் குறித்தோ பேசுவதற்குக் கடுமையான மனத்தடைகள் இருப்பதையும் அந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.



# திருமணத்திற்கு முன்...

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால், உண்மையில் நடப்பதென்ன? எல்லாத் திருமணங்களும் வெற்றிகரமானதாக இருக்கிறதா? இந்த கேள்விக்கு பதில் இல்லை என்றே இப்போது பெரும்பாலானோர் சொல்கின்றனர். நீதிமன்றங்களில் இப்போது உள்ள வழக்குகளில், மிக அதிக வழக்குகள் விவாகரத்து வழக்குகள்தான்.

காதல் திருமணம் செய்தவர்களும் சரி... பெற்றோர் பார்த்து பேசி முடித்து, நடத்தி வைத்த திருமணங்களும் சரி... பெரும்பாலானவை நீதிமன்றங்களில் போய் நின்று விடுகின்றன. இதற்குக் காரணம், தம்பதியினரிடையே சரியான புரிதல் இல்லாததுதான். திருமணம் முடிந்த உடனேயே ஒருவருக்கொருவர் ஈகோ பிரச்சினை, பணப் பிரச்சினை, உடல்

நலப்பிரச்சினை என பல கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு திருமணத்திற்கு முன்பே இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளுதல் தான்.

திருமணம் செய்து கொள்ளப் போகும் இருவரும், மனம் விட்டு பேசினால் மட்டும் போதாது. உண்மையான பிரச்சினை என்ன என்று அப்போது தெரியாது. கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டு, பதிலை பெற்ற பின் முடிவு செய்தால் போதும் பின்னர் திருமண வாழ்க்கையில் எந்த பிரச்சினையும் வராது என்கின்றனர் நிபுணர்கள். இதோ அந்தக் கேள்விகள்.

உங்களை கைபிடிக்கப் போகிறவரின் மொத்த வருமானம் எவ்வளவு?

தனிப்பட்ட முறையில் ஏதாவது கடனை திருப்பிச் செலுத்தி வருகிறாரா?

வீட்டுக்கடனுக்கான தவணையில் இன்னும் எத்தனை தவணைகள் திருப்பி செலுத்த வேண்டும்?

திருமணத்திற்குப் பின்பும் இருவரும் தனித்தனி வங்கிக் கணக்கு வைத்திருந்தால் தப்பில்லையே?

இதுவரை எத்தனை முறை வேலையை மாற்றியிருக்கிறீர்கள்? அதற்கு ஏதாவது முக்கிய காரணம் உண்டா?

வெளிநாட்டில் வேலை கிடைத்தால், அதை ஏற்றுக் கொள்ளலாமா? குடும்பத்தினரை அழைத்துச் செல்ல அனுமதிக்காவிட்டால் என்ன செய்வீர்கள்?

டாக்டரிடம் எச்.ஐ.வி.பரிசோதனை செய்து கொள்ள சம்மதமா?

கோபம் வரும்போது, மிகவும் ஆவேசமடைவீர்களா?

செக்ஸ் உறவு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

திருமணத்திற்குப் பின் பெற்றோருடன் வசிக்கப் போகிறீர்களா? தனியாகவா?

கேள்விகள் இவ்வளவுதான். திருமணம் செய்து கொள்ளப் போகும் ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் இந்தக் கேள்விகளை கேட்டு பதிலை பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விகள் கடினமாகத் தோன்றலாம். ஆனால், திருமணத்திற்குப் பின், பெரும்பாலான தம்பதிகள், இதே விவகாரங்களில் தான் பிரிந்து விடுகின்றனர். எனவே, திருமணத்திற்கு முன்பே, எல்லா சந்தேகங்களையும் போக்கிக் கொண்டால், வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

பத்மலோசனி ஹரிகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## அவசர புத்தியால் ஏற்பட்ட அதிர்ச்சி

எந்தவொரு விடயத்திலும் அவசரப்படக்கூடாது என்பதுடன் முன்னெச்சரிக்கையாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காக எனக்கு ஏற்பட்ட சம்பவமொன்றை அக்கம்பக்கத்தினூடாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.இந்த சம்பவம் எனக்கு அதிர்ச்சியை மட்டுமல்ல அவமானத்தையும் ஏற்படுத்தியது.இதனாலேயே ஏனையோருக்கும் எனது நிலை ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற்காக இதைக் கூறுகின்றேன்.

எனது வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி பழுதடைந்து விட்டது.அதனைத் திருத்துவதற்காக ஒரு கடையில் கொடுத்தேன்.எனக்கு அந்தக் கடைக்காரரை தெரியாது. ஆனால் தொலைக்காட்சிப் பெட்டிகளை திருத்துபவர்களை எனக்கு தெரியாது என்பதால் அந்தக் கடையில் கொடுப்பதை தவிர வேறு வழி எனக்கு இருக்கவில்லை.

அந்தக் கடை முதலாளி கொஞ்சம் வயதானவராக இருந்தபோதும் அங்கு வேலைசெய்தவர்கள் இள வட்டங்களாகவே இருந்தனர்.தொலைக்காட்சிப் பெட்டியை திருத்தக் கொடுத்த போது ஒரு வாரத்தின் பின் வருமாறு கூறினர்.நானும் சரியாக ஒரு வாரம் கழித்து சென்று திருத்தல் கூலியாக 5 ஆயிரம் ரூபாவை செலுத்தி தொலைக்காட்சிப் பெட்டியை எடுத்து வந்தேன்.

வீட்டுக்கு கொண்டு வந்து பெட்டியை திறந்து தொலைக்காட்சிப் பெட்டியை வெளியே எடுத்தபோது அந்தப் பெட்டிக்குள் சீ.டி ஒன்று இருந்தது.அதனை நான் எடுத்துப் பார்த்த போது அதில் 'திருவிளையாடல்' என்று எழுதப்பட்டிருந்தது.சரி கடையில் யாரோ மாறி இதற்குள் வைத்துவிட்டார்கள் என்று நினைத்தேன்.

சிவாஜி-பத்மினி நடித்த திருவிளையாடல் படத்தை பார்த்து பல நாட்களாகி விட்டதால் ஒரு தடவை அதனை பார்த்து விட்டு கொடுப்போம் என்று நினைத்து வைத்து விட்டேன். ஒருநாள் வீட்டில் எல்லோரும் ஒன்றாக இருந்தோம்.நான் நல்ல படங்களாக இருந்தால் மனைவி மற்றும் மகள்மாருடன் இருந்து பார்ப்பதுதான் வழமை.

எனவே சினிமாவில் வரலாறு படைத்த இந்தப் படத்தை குடும்பத்துடன் பார்க்க விரும்பியதாலேயே அனைவரும் ஒன்றாக இருந்தபோது அந்தப்பட சீடியை எடுத்துப் போட்டேன்.ஏற்கனவே திருவிளையாடல் படம் குறித்து எனது மகள்மாருக்கு நான் கூறியிருந்ததால் அவர்களும் அந்தப் படத்தை பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருந்தபோது தான் அந்த அசிங்கம் நடந்தது.

நான் சீடியை போட்டுவிட்டு வந்து மனைவி, பிள்ளைகளுக்கு அருகே அமர்ந்து படத்தை பார்த்தபோது அதில் வந்த காட்சி என்னை உறைய வைத்தது.மனைவி,பிள்ளைகள் எல்லாம் 'ஐயோ' என கத்தியபடி முகத்தை மூடிக்கொண்டனர். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பதறியபடி ஓடிப்போய் படத்தை நிறுத்தினேன்.

அந்த சீடியில் இருந்தது ஆபாச படம். அதாவது நீலப்படம். நான் தொலைக்காட்சி பெட்டியை திருத்தக் கொடுத்த இடத்தில் அந்த சீடியை யாரோ தொலைக்காட்சி பெட்டிக்குள் வைத்துள்ளனர். அவர்கள் மற்றையவர்களுக்கு சந்தேகம் வரக்கூடாது என்பதற்காகவே அந்த சீடியில் 'திருவிளையாடல்' என்று எழுதி வைத்துள்ளனர். நான் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக செயற்படாததாலும் எனது அவசர புத்தியினாலும் எனது குடும்பத்திற்கு முன்னாலேயே அவமானப்பட நேர்ந்தது. அது மட்டுமன்றி நான் இப்போது எனது மனைவி, பிள்ளைகளுடன் ஒன்றாக இருந்து படம் பார்ப்பதையும் நிறுத்திவிட்டேன். அந்தளவுக்கு இந்தச் சம்பவம் என்னைப் பாதித்து விட்டது.

இவ்வாறான சம்பவங்கள் ஏனையோருக்கும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இதை நான் இங்கு எழுதியுள்ளேன்.எனவே பெற்றோர் இது போன்ற விடயங்களில் மிகுந்த முன்னெச்சரிக்கையுடனும் அவசரப்படாமலும் செயற்படவேண்டும்.

**எஸ்.சுபாஸ்கரன்**

## ஹோட்டலுக்குக் கீழே 900 வெடிகுண்டுகள்

ஜப்பானின் ஒக்கினாவா நகரில் உள்ள ஒரு ஹோட்டலுக்குக் கீழ் வெடிக்காத நிலையில் இருந்த 900 வெடிகுண்டுகள் கண்டு பிடித்து மீட்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் 2 ஆம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்டவையாகும்.

2 ஆம் உலகப் போரில் ஜப்பான் ஒரு முக்கிய நாடு என்பதால் அங்கு தரையைத் தோண்டும் பணியில் ஈடுபட்டால் கீழே வெடிகுண்டுகள் புதைந்துள்ளதா என்பதை அறிய மெட்டல் டிடெக்டர் மூலம் சோதனையிடுவது வழக்கம். அந்த அடிப்படையில் ஒக்கினாவா நகரில் வீதிப் பணியில் ஈடுபட்டபோது மெட்டல் டிடெக்டர் சோதனை நடத்தப்பட்டது. அப்போது அங்குள்ள ஹோட்டலுக்குக் கீழே உள்ள பகுதியிலிருந்து பீப் ஒலி கேட்கத் தொடங்கியது. இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

இதையடுத்து இராணுவ வெடிகுண்டு கண்டுபிடிக்கும் நிபுணர் குழுவினர் வந்து சோதனை நடத்தினர். அப்போதுதான் ஹோட்டலுக்குக் கீழே வெடிக்காத நிலையில் வெடிகுண்டுகள் புதைந்திருப்பது தெரியவந்தது. மொத்தம் 902 வெடிகுண்டுகள் புதைந்துள்ளன.



இவை அனைத்தும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டவையாக இருக்கலாம் என கருதப்படுகிறது. இவ்வளவு வெடிகுண்டுகள் அதுவும் வெடிக்காத நிலையில் ஜப்பானில் கிடைத்திருப்பது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.

ஒக்கினாவா முழுவதும் 2 ஆம் உலகப் போரின்போது பயன்படுத்தப்பட்ட குண்டுகள் பெருமளவில் புதைந்து கிடக்கிறதாம். எனவே தான் அங்கு கட்டுமானப் பணியின் போது முதலில் மெட்டல் டிடெக்டரால் சோதனையிட்ட பின்னரே மண்ணைத் தோண்டுகிறார்கள். அவ்வப்போது அங்கு வெடிகுண்டுகள் கிடைப்பது சகஜம். ஆனால் பெருமளவில் கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

தலைநகர் டோக்கியோவிலும் கூட இதுபோல வெடிகுண்டுகள் கிடைப்பது சகஜமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய சுவை...

# இரவலராய் மாறிய மன்னன்

முனைவர் எஸ்.சேதுராமன்

இன்றைய உலகில் தனக்குக் கீழ்நிலையில் உள்ள ஒருவர் நற்செயல் செய்யும் போது அவர்களைப் பாராட்டுவது என்பதோ அவர் தம் செயல்களுக்கு ஆதரவு தருவது என்பதோ கிடையாது. ஆனால் மனச்சான்று சிறிதும் இன்றி அவரை இகழ்வர். இத்தகைய மனிதப் பண்பற்ற இழிகுணங்கள் மனிதனிடம் இருத்தல் கூடாது. தன்னைவிடத் தாழ்நிலையில் ஒருவர் நற்செயல்களைச் செய்தால் அவரைப் பாராட்டுவதுடன் அவர் தம் செயல்களுக்கும் உறுதுணையாக இருத்தல் வேண்டும். இத்தகைய மனிதப் பண்பினை புறநானூற்றில் இடம்பெறும் பாடல் ஒன்று தெளிவுற எடுத்துரைப்பது நினைத்தற்குரியதாகும்.

வள்ளல்களைப் புலவர்களும் பரிசிலர்களும் வாழ்த்திப் பாடுவர். இது இயற்கை. ஆனால், வள்ளல் ஒருவனை அவனினும் ஆற்றலால் உயர்ந்திருந்த மன்னன் போற்றிப் பாடுவது அரிது. சிறுகுடி என்ற சிற்றூருக்குத் தலைவனாக பண்ணன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவனைக் கிழான் என்றும் பண்ணன் என்றும் கூறுவர். அவனது நெல்லித் தோட்டமும் தீஞ்சுவை நீர் அளிக்கும் கிணறும் இலக்கியத்தில் இடம்பெற்று இறவாத தன்மையடைந்துள்ளன. இப் பண்ணைப் பற்றி மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் என்ற புலவர்,

**'இடுக்கண் இரியல் போக**
**உடைய கொடுத்தோன்!**
**கொடை மேந்தோன்றல்'**
**(புறம்-388)**

என்று அவனது வள்ளல் தன்மையை எடுத்துக்காட்டிப் புகழ்கிறார்.

இப்பண்ணன் ஆட்சியாலும் அரசாலும் மிகப் பெரியன் என்று கொள்ளுதற்கில்லை. இவன் குறுநல மன்னரிலும் சிறு நிலப்பரப்பினை உடையவன். எனினும் முடியுடை மூவேந்தரிலும் கொடைத்திறம் மிக்கவன். இதனால் இவன் பெற்ற சிறப்புப் பெயர்,

'பசிப்பிணி மருத்துவன்' என்பதாகும். பசியாகிய நோயைப் போக்கும் மருந்தினை அளித்து மகிழும் வள்ளல் என்பது இதன் பொருளாகும். இவனது இப்பெரும் புகழைப் புலவரேயன்றி இவனினும் மிக்க ஆற்றலும் அறிவும் உடைய சோழ மன்னனும் போற்றி இருக்கின்றான். சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் என்பது அச்சோழ மன்னனது பெயராகும். இம்மன்னன் பேராற்றலும் பெருவளமும் உடையவனாகத் திகழ்ந்தான். எனினும் பண்ணனது பண்பைக் கண்டு, இரவலனாக மாறி அவனைப் பாராட்டிப் புகழ்கிறான்.

இதன் மூலம் இரண்டு பெரிய உண்மைகளை நமக்கு எடுத்துக்காட்டுகிறார். ஒன்று அவன் கவிதை வளம் உடையவன் என்பது. மற்றொன்று, அவன் பண்பில் சிறந்து விளங்குபவன் என்பது. சோழனின் மனிதநேயப் பண்பையும் வாழ்வியல் உண்மைகளையும்

**'யான் வாழும் நாளும் பண்**
**ணன் வாழிய! பாணர் காண்**
**கிவன் கடும்பினது இடும்பை**
**யாணர்ப் பழுமரம் புள்**
**இமிழ்ந்தன்ன ஊண்ஒலி**
**அரவம் தானும் கேட்கும்**
**பொய்யா எழிலி பெய்**
**விடம் நோக்கி முட்டை**
**கொண்டு வற்புலம் சேரும்**
**சிறு நுண் எறும்பின் சில்**
**லொழுக்கு ஏய்ப்பச் சோறு**
**டைக் கையர் வீறு வீறு**
**இயங்கும் இருங்கிளைச்**
**சிறா அர்க் காண்டும் கண்**
**டும் மற்றும் மற்றும் வின**
**வுவதும் தெற்றெனப் பசிப்**
**பிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ சேய்த்தோ கூறு**
**மின் எமக்கே!' (புறம்-173)**

என்ற பாடல் தெளிவுற எடுத்துரைக்கிறது.

பண்ணனின் சிறப்பறிந்த மன்னர் மன்னனின் உணர்ச்சி பொங்குகிறது. ஊற்றெனச் சுரக்கிறது. கவிதை பிறக்கிறது. முதலிலே தோன்றுவது பண்ணன் நெடுங்காலம் வாழ வேண்டுமே என்ற உணர்வுதான். எவ்வாறு நெடுங்காலம் வாழ்வான்? அவனும் மனிதன்தானே! கூற்றுவனுக்கு இலக்காக ஒருநாள் மடிய வேண்டியவன் தானே! கூற்றுவனை வேண்டுகிறான் மன்னன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். தனது ஆயுளையும் எடுத்துக் கொடுத்துப் பண்ணனை நெடுநாள் வாழ வைக்குமாறு வேண்டுகிறான். எவ்வளவு பெரிய நல்லுள்ளம்! அடுத்த வேளை உணவுக்கு என் செய்வேன் என ஏங்கும் ஏழை ஒருவன் இதைக் கூறவில்லை. வாழ்வை வெறுத்தொதுக்கும் வளமிலான கூற்றும் அன்று. செல்வ வாழ்வில் புரளும் மன்னர் மன்னன் இதைக் கூறுகிறான். பண்ணனின் பண்புக்கேற்ற வண்ணம் பாராட்டும் சோழ மன்னனின் புலமையை இதில் காணலாம்.

தன்னையும் ஓர் இரவலனாக வைத்து மதித்தால்தான் வள்ளல், பண்ணனது பெருமையை உணர்த்த முடியும் என எண்ணிய மன்னன் தன்னிலை மறந்து தன்னை எளியவனாகத் தாழ்ந்த நிலையில் வைத்து நோக்குகிறான். அந்த நோக்கத்திற்குப் பண்ணன் வெறும் பண்ணனாகவோ வள்ளலாகவோ தோன்றவில்லை.

'பசிப்பிணி மருத்துவ'னாகக் காட்சியளிக்கிறான்.

'பசிப்பணி மருத்துவன்' என்ற சொற்றொடர் ஆழம் வாய்ந்ததாக அமைந்து, எளிதாகப் பொருள் உணர்த்துகிறது. மேலும் ஆட்சியாளர்கள் பிறர் செய்யும் நல்லனவற்றைப் பாராட்டுதல் வேண்டும். மாறாக அவர்களைத் தூற்றக்கூடாது. மக்களுக்குப் பயன் நல்கும் செயல்களைச் செய்வோருக்கு உறு

துணையாக இருப்பது ஆழ்வோரின் கடமையாகும் என்ற இக்காலத்துக்குப் பொருந்தும் அரிய வாழ்வியல் கருத்துகளையும் சோழ மன்னன் இப்பாடல் வழி எடுத்துரைப்பது நோக்கத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலின் ரகசியங்கள்

நமது மனித உடலை 'ரகசியங்களின் இருப்பிடம்' என்று வர்ணிக்கின்றனர் அறிஞர்கள். ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தவை, கண்டுபிடிக்காதவை என எத்தனையோ கோடி செயல்கள் மனித உடலில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் சில விடயங்களைப் பார்ப்போம்.


* இமைக்கும் செயலால் மட்டும் ஒரு மனிதன் ஒரு நாளைக்கு சுமார் அரை மணிநேரம்வரை கண்களை மூடுகிறான்.

* சராசரியாக மனிதன் தன்னுடைய வாழ்நாளில் நடக்கும் தூரம், பூமியை நான்கு முறை சுற்றி வருவதற்குச் சமம்.

* மனிதனின் உடலில் சுமார் 5 இலட்சம் முடிகள் வரை இருக்கின்றன. இதில் தினமும் சராசரியாக 60 முடிகள் வரை உதிர்ந்து, மீண்டும் முளைக்கின்றன.

* நமது உடலில் உள்ள தோலின் எடை மட்டும் 2.7 கிலோகிராம் முதல் 4.5 கிலோகிராம் வரை.

* உடலில் உள்ள தசை நாண்களின் எண்ணிக்கை சுமார் 6 இலட்சம் கோடி. ஒவ்வொன்றின் கன அளவும் முடியை விட சிறியது. ஆனாலும் தன்னுடைய எடையைப் போன்று ஆயிரம் மடங்கு எடையைத் தாங்கும் ஆற்றல் தசை நாண்களுக்கு உண்டு.



# குறுக்கெழுத்துப்போட்டி - 43

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | ■ | 10 |
| 11 | 12 | 13 | ■ | 14 | 15 |
| ■ | ■ | 16 | 17 | ■ | 18 |
| 19 | 20 | ■ | 21 | 22 | ■ |
| 23 | 24 | 25 | ■ | 26 | 27 |

**இடமிருந்து வலம்**

1. இலங்கைக்கு நட்பான இஸ்லாமிய நாடு
4. இந்தியாவிலுள்ள பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம்
6. தாம்பாளம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
11. சுறுசுறுப்பான குழந்தையை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)
14. நில் என்றும் கூறுவர் (திரும்பியுள்ளது)
16. இறந்தவரை இதிலும் கொண்டுசெல்வர்
19. ஆண் மாடு
21. பயம் என்றும் சொல்லலாம்
23. இது சிறிதென்றாலும் காரம் பெரிதென்பர் (குழம்பியுள்ளது)
26. சில நாடுகளில் இதனாலும் அடித்து தண்டனை கொடுப்பர் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. முன்னைய போர் ஆயுதங்களில் ஒன்று
2. நீதி தேவதையின் கையில் இருப்பது (குழம்பியுள்ளது)
3. தாத்தா என்றும் கூறுவர் (தலைகீழ்)
5. நீர் நிரம்பிய தொட்டி (குழம்பியுள்ளது)
17. நோய் (தலைகீழ்)
19. கானகம் என்றும் கூறலாம்
20. பயிர்களுடன் வளர்வது (தலைகீழ்)
22. திக்கு என்றும் சொல்லலாம்

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

## குறுக்கெழுத்துப்போட்டி - 41 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. கல்வி | 1. கலகம் |
| 4. கோழி | 2. பல் |
| 6. பலம் | 3. விவேகம் |
| 9. படி | 4. கோடி |
| 12. வேலை | 5. பழி |
| 14. கடம் | 15. அடம் |
| 17. நீர் | 17. நீலம் |
| 20. மலர் | 18. சமர் |
| 23. அணி | 20. தார் |
| 25. சாதம் | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**வி.சதுயனன்,**
**சரஸ்வதி மழலைகள் கல்விப்பூங்கா,**
**கைதடி மேற்கு, கைதடி.**

## பாராட்டுப்பெறுவோர்

01. ஞ.செந்தமிழ்ச்செல்வன்,
குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

02. எம்.பி.அகிலன்,
இல. 39, கல்லூரி வீதி,
திருகோணமலை.

03. செல்வி எம்.ஏ.எஸ்.நஸ்லீனா,
புவக்கொட்டுவ, ஹேகொட,
பதுளை.


04. திருமதி உ.சண்முகநாதன்,
23, டச் வீதி,
சாவகச்சேரி.

05. எஸ்.மகேஸ்வரன்,
இல. 4/37, அபோராஜா மாவத்தை,
கொடிகமுவ, இரத்தினபுரி.

*உங்கள் விடைகளை*
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15**
*என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...*




# பவளப் பாறைகள்



பவளம் என்பது பொதுவான பெயராகும். முதுகெலும்பற்ற, பல கால்களை உடைய உயிரினங்கள் கடலில் வசித்து வருகின்றன. அந்த உயிரினங்கள் கடல் நீரில் உள்ள தாது உப்புகளை உணவாக உட்கொள்கின்றன. அப்போது அவற்றின் உடலில் தாது உப்புகள் படிந்து, இறுகி பாறையாக மாறிவிடுகின்றன.

8 முதல் 35 மீற்றர் வரையுள்ள ஆழத்தில் பச்சை, கருஞ்சிவப்பு, பழுப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களில் பவளப் பாறைகள் காணப்படுகின்றன. 50 மீற்றருக்கு அதிகமான ஆழத்தில் வெள்ளையாகவோ அல்லது சாம்பல் நிறத்திலோ உள்ளன. பொதுவாக பவளங்கள் சிவப்பு நிறத்தில் காணப்படும் என்று முற்காலத்தில் இருந்து கூறப்படுகிறது. சிவப்பு நிறப் பவளங்களும் உள்ளன. ஆனால், இவை எல்லாம் இடங்களிலும் காணப்படுவதில்லை. மத்திய தரைக்கடல் பகுதியில் மட்டுமே சிவப்பு நிறப் பவளங்கள் காணப்படுகின்றன.

பவளப் பாறைகளின் புதை படிவங்களில் இருந்து பெட்ரோலியம் மற்றும் உலோகங்கள் எடுக்கப்படுகிறது. இந்தப் புதைவடிவங்களில் ஓரளவு துத்தநாகமும் செம்பும் அடங்கியிருக்கிறது. பண்டைய காலத்தில் இருந்தே பவளங்கள் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.


# கலிலியோவின் உடற்பாகங்கள் கண்டுபிடிப்பு

உலகின் புகழ்பெற்ற விண்வெளி ஆராய்ச்சியாளர் கலிலியோவின் காணாமல்போன சில உடற்பாகங்கள் மீண்டும் கிடைக்கப் பெற்றுள்ளதாக இத்தாலிய அருங்காட்சியக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விஞ்ஞானி கலிலியோ 1564 ஆம் ஆண்டு முதல் 1642 ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்தார் எனவும் அவரது உடல் 1737 ஆம் ஆண்டு மீண்டும் நல்லடக்கம் செய்யப்பட்டதாகவும் வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கலிலியோவின் இறுதிச் சடங்கின்போது அவரது விரல்கள் வேமன் மற்றும் மேசன் என்பவர்களால் கலிலியோவின் நினைவாகத் திருடப்பட்டதாக ஃபுளோரன்ஸ் அருங்காட்சியக இயக்குநர் பவுளோ கலுஸி தெரிவித்தார். கலிலியோவின் மிகப்பெரிய கண்டுபிடிப்பான தொலைநோக்கி மற்றும் காம்பஸ் ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளன. கடந்த 1905 ஆம் ஆண்டு காணாமல்போன கலிலியோவின் கட்டைவிரல் மற்றும் பற்கள் கலைப்பொருட்கள் சேகரிப்பாளர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவிருக்கும் ஆச்சரியம்!







விஞ்ஞான உலகத்தில் பெரும் முன்னேற்றகரமான வளர்ச்சிகளையும் பிரமாண்ட கண்டுபிடிப்புகளையும் மேற்கொண்டுவரும் தகவல் தொழில்நுட்பத் துறையில் பல அதிசயம் மிக்க இலத்திரனியல் சாதனங்களின் உருவாக்கம் இன்று பல துறைகளிலும் முன்னேற்றத்தை உருவாக்கி வருகின்றன.

இந்த வரிசையில் எதிர்காலத்தில் வெளிவரவுள்ளது மொபைல் டிவைஸ் ***(Mobile Device)*** எனும் ஒரு இலத்திரனியல் சாதனம். கையடக்கத் தொலைபேசி போன்று செயற்படக்கூடிய இச்சாதனம் பல தகவல் தொழில்நுட்ப விடயங்களை உள்ளடக்கி தயாரிக்கப்படுகிறது.

மொபைல் டிவைஸ் ***(Mobile Device)*** எனப்படும் இச்சாதனத்தில் இன்ரர்நெட், தொடுகை திரை ***(Touch Screen)***, கமெரா, ஸ்கானர் மற்றும் வயர் இல்லாத வலைப்பின்னல் ***(WiFi)*** ஆகிய வசதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இந்த சாதனம் ஒரு சதுர கண்ணாடி திரை வடிவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை ஒரு கட்டிடத்தின் முன்போ அல்லது ஒரு பூங்காவின் முன்போ பிடித்தால் அந்தக் கட்டிடத்தைப் பற்றிய முழு விபரங்களையும் திரையில் தரக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறிப்பிட்ட கட்டிடத்தின் உள்ளக அமைப்புகள் மற்றும் எத்தனை தளங்கள் உள்ளன, எந்தத் தளத்தில் என்ன அலுவலகம் உள்ளது போன்றவை பற்றியும் இந்தச் சாதனத்திலுள்ள திரையின் மூலம் அறிந்துகொள்ளலாம்.





மேலும் இந்தச் சாதனத்தை ஸ்கானராகவும் பயன்படுத்தலாம். ஒரு பத்திரிகையின் மீதோ அல்லது புத்தகத்தின் மீதோ இதைப் பிடித்தால் போதும் அவற்றில் உள்ள விடயங்களை ஸ்கான் செய்து தன்னுள் சேமித்துக்கொள்ளும் ஆற்றல் கொண்டது இந்த மொபைல் டிவைஸ். அத்துடன், ஒரு புத்தகத்தில் உள்ள ஆங்கிலச் சொற்களுக்குத் தேவையான கருத்துகளையும் அதைப் பற்றிய விளக்கங்களையும் இந்தத் திரையில் படித்துக்கொள்ளலாம். ஒரு மொழியில் உள்ள எழுத்துருக்களை ஆங்கிலத்திற்கு மொழிமாற்றம் செய்து இந்தத் திரையில் பார்க்க முடியும்.

மொபைல் டிவைஸின் இன்னொரு பயன்பாடாக சுப்பர் மார்க்கெட்டுகளிலுள்ள பொருட்களின் விலைகளை இதில் பார்வையிட முடிவதுடன், உணவு விடுதிகளில் பரிமாறப்படும் உணவுகளின் வகை, விலை மற்றும் ஊட்டச்சத்து, ஆரோக்கியம் போன்றவற்றையும் இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு திருமணம் நடக்காது - சோனா



எனக்குத் திருமணம் நடக்காது. நான் திருமணமே செய்து கொள்ள மாட்டேன். ஆண்களுடன் வாழ்வது சிரமம் என்று நடிகை சோனா தெரிவித்துள்ளார். சென்னையில் யுனிக் என்ற பெயரில் நகைக்கடை நடத்திவரும் நடிகை சோனா தற்போது கனிமொழி என்ற படத்தைத் தயாரித்துள்ளார். இது தொடர்பான பத்திரிகையாளர்கள் சந்திப்பில் சோனா கூறியதாவது;

நான், பணக்கார குடும்பத்தைச் சேர்ந்த பெண் அல்ல. சின்ன வயதில் ஏழ்மையை அனுபவித்து இருக்கிறேன். என் சித்தி, ஆதரவற்றோர் ஆசிரமம் நடத்தி வந்தார். அந்த ஆசிரமத்தில் மூன்று வருடங்கள் தங்கியிருந்தேன். அப்போது ஆதரவற்ற பெண்களின் கஷ்டங்களைக் கேட்டு இருக்கிறேன். இப்போது நான் படம் தயாரிக்கிற அளவுக்கு வளர்ந்து இருக்கிறேன். அதற்குத் தமிழ் ரசிகர்கள் தான் காரணம். நான் சம்பாதிக்கிற பணத்தின் மூலம் ஆதரவற்ற பெண்களுக்கு உதவ விரும்புகிறேன். இதற்காக ஒரு அறக்கட்டளை தொடங்க இருக்கிறேன். இனிமேல் நான் படுகவர்ச்சியான காட்சிகளில் நடிக்க மாட்டேன். கவர்ச்சியைக் குறைத்து கொள்ளப்போகிறேன். கனமான கதாபாத்திரங்களிலும் நல்ல கதையம்சம் உள்ள படங்களிலும் நடிக்க ஆசைப்படுகிறேன். வருடத்துக்கு ஒரு படத்தில் நடித்தால் போதும் என்ற முடிவுக்கு வந்து இருக்கிறேன். கமல்ஹாசன் போன்ற பெரிய நடிகர்களின் படங்களில் நடிக்கும் வாய்ப்பு வந்தால் என் கொள்கையை கொஞ்சம் தளர்த்துவேன். எனக்குத் திருமணம் நடக்காது என்றும் அப்படியே திருமணம் செய்து கொண்டாலும் அந்த பந்தம் நிலைக்காது என்றும் ஒரு ஜோதிடர் கூறியிருக்கிறார். ஜோதிடத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனால் திருமணம் செய்து கொள்ளமாட்டேன், ஆண்கள் துணையில்லாமல் வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும். அதேபோல் ஆண்களுடன் வாழ்வதும் சிரமம். எனக்கு சினேகிதிகளை விட சினேகிதர்கள் தான் அதிகம். 99 சதவீதம் 'பசங்களை'த் தான் எனக்குப் பிடிக்கும் இவ்வாறு சோனா கூறியுள்ளார்.



## பெண்ணாக விஷால்



பாலாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை மறந்து மீண்டும் படப்பிடிப்புக்கு செல்லத் தொடங்கியிருக்கிறார் விஷால். அவன் இவனுக்காக ஒட்ட வெட்டிய முடியுடன் ஆண்மை மிடுக்குடன் இருக்கும் விஷாலுக்கு அவர் தோற்றத்துக்கு நேர் எதிரான கதாபாத்திரத்தை தந்திருக்கிறாராம் பாலா. அதாவது பெண்மை கலந்த வேடத்தில் விஷால் நடிக்கிறாராம். மலையாளத்தில் திலீப் சாந்துப் பொட்டு என்ற படத்தில் பெண்மை கலந்த ஆண் மகனாக நடித்திருப்பார். ஏறக் குறைய அதே வேடம் என்கிறார்கள். இதுபோன்ற நபர்களை இதுவரை தமிழ் சினிமா கிண்டல் செய்தே வந்துள்ளது. பாலா நிச்சயம் அதை செய்ய மாட்டார் என நம்பலாம்.

## Saturday சினிமா

ஆட்டக்காரருடன் எப்போது ஜோடி சேர்ந்தாரோ அப்போதே ஒன்பது தாராவின் மார்க்கெட் ஆட்டங்கட்டுவிட்டது. இவரைப் படங்களில் போடவே தயக்கம் காட்டுகிறார்கள் இளம் நாயகர்கள். இதனால் கன்னடம், மலையாளம் என சொற்ப சம்பளம் தரும் மொழிகளில் நடிப்பவர் புடவைக் கடை விளம்பரம்பரமானாலும் தயார் என இறங்கி வந்திருக்கிறார்.

*மலபார் நடிகைக்கு எதிராக ஒட்டு மொத்த திரையுலகமும் திரண்டு நிற்க தலைவர் நடிகர் மட்டும் மலபாருக்கு ஆதரவாகத் தப்புத்தாளம் போடுகிறார். இதற்கு நடிகர் மற்றும் அவரது துணைவியாரின் வியாபார தொடர்புகள் தான் காரணம் என கிசுகிசுக்கிறார்கள்.*

## வேலாயுதத்தில் இரட்டை எழுத்தாளர்கள்


வேலாயுதம்—விஜய், ஜெனிலியா

விஜய்யின் வேலாயுதம் படத்தை விஜய்யை போலவே ரசிகர்களும், விநியோகஸ்தர்களும் ஆர்வமாக எதிர்பார்க்கிறார்கள். விஜய் படத்தில் கதை இருக்காது அல்லது ஒரேவிதமான கதைதான் இருக்கும் என்ற குற்றச்சாட்டை வேலாயுதம் பொடிப் பொடியாக்கும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்புக்கு காரணம். ஜெயம் ராஜா இயக்கிய நான்கு படங்களுமே கதையின் வலிமையால் வெற்றி [illegible] கார்[illegible] தருபவை. வேலாயுதம் படத்திலும் கதை இருக்கும் என்பது அனைவரின் நம்பிக்கை. மேலும் படத்தின் வசனம் எழுதும் பொறுப்பை இரட்டை எழுத்தாளர்களான சுபாவிடம் ஒப்படைத்திருக்கிறார் ஜெயம் ராஜா. வி.ஆனந்தின் ஆஸ்தான எழுத்தாளர்களான இவர்கள் கனா கண்டேன், அயன் படங்களுக்கு கதை, வசனம் எழுதியவர்கள். கோ படத்துக்கும் இவர்களே வசனம். கதை ஏரியா பலமாக இருப்பதால் வேலாயுதம் வெற்றி பெறும் என்கிறார்கள். நம்புவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாமதமாகும் எந்திரன்?


எந்திரன்- ரஜினிகாந்த், ஐஸ்வர்யாராய்

ஒட்டுமொத்த ரசிகர்களின் ஒரே எதிர்பார்ப்பு எந்திரன். விநியோகஸ்தர்கள் ஆவலாக எதிர்பார்க்கும் படமும் இதுதான். ஒரு வருடத்தின் நஷ்டத்தை ஈடு செய்வதுடன் லாபத்தை தருகிற கற்பகதரு, ரஜினி படம் என்பது அவர்கள் பலமுறை அனுபவித்த உண்மை. அடுத்த மாதம் படம் திரைக்கு வந்துவிடும் என ரஜினியே அறிவித்திருக்கிறார். ஆகஸ்டை குறிவைத்தே ஷங்கரும் வேகமாக போஸ்ட் புரொடக்சன் வேலைகளை முடுக்கி விட்டுள்ளார். ஆனால் எந்திரன் என்பது யாருடைய எதிர்பார்ப்புக்குள்ளும் அடங்காத பிரமாண்ட படமாயிற்றே... அறிவித்தபடி ஆகஸ்டில் படத்தை கொண்டு வருவது கஷ்டம் என்கிறார்கள் எந்திரன் யூனிட்டில். படத்தின் கிராஃபிக்ஸ் வேலைகள் மேலும் நாட்களை எடுத்துக்கொள்ள வாய்ப்பிருப்பதால் படம் செப்டெம்பர் மாதமே திரைக்கு வரும் என்கிறார்கள். படத்தின் தரத்தில் எந்த சமரசமும் செய்து கொள்வதில்லை என்பதில் ஷங்கரைப் போலவே தயாரிப்பாளரும் உறுதியாக இருப்பதால் செப்டெம்பர் மாதமே படம் திரைக்கு வரும் என அடித்துச் சொல்கிறார்கள்.

செந்தமிழன் சிறைக்குச் சென்றதால் அவரது கட்சிக்காரர்களைவிட அதிக கவலையில் இருக்கிறார் விளம்பரத்துக்குப் பல கோடி செலவழிக்கும் ஆர்ட்டைகர் தயாரிப்பாளர். செந்தமிழன் சேனாதிபதி நடிகரை வைத்து இயக்கும் படத்தை இவர்தான் தயாரிப்பதாக இருந்தது. சிறை அவரது திட்டத்தை சின்னாபின்னமாக்கியிருக்கிறது. வருத்தம் இருக்காதா என்ன.

## அஜித்தை விரட்டும் பிரச்சினைகள்



வெங்கட்பிரபு இயக்கத்தில் அஜீத் நடிக்கும் படத்துக்கு மங்காத்தா என்று பெயர் வைத்திருந்தனர். உபதலைப்பு, உள்ளே வெளியே இந்த மங்காத்தா தலைப்பை ஏற்கனவே ஒருவர் பதிவு செய்து வைத்துள்ளார். இதன் காரணமாக மங்காத்தா பெயரை பயன்படுத்துவதில் திடீர் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பெயரை பதிவு செய்திருக்கும் நிறுவனத்திடம் அஜீத்தே நேரடியாகப் பேசியிருக்கிறார். இதனால் பிரச்சினை சுமுகமாக முடிந்துவிடும் என்ற நம்பிக்கையில் இருக்கிறது படக்குழு.

## விலைமாதுவாக சமீரா



சமீராவின் கைவசம் ஒரு தமிழ்ப் படம் மட்டுமே இருக்கிறது. கௌதம் வாசுதேவ் மேனனின் நடுநிசி நாய்கள். படத்தின் பெயரைப் போலவே கதையும் வித்தியாசமாக இருக்கும் என்கின்றன படத்தைப் பற்றி வரும் தகவல்கள். காதல் எப்படி இருக்கும் என்பதை இதுவரை என்னுடைய படங்களில் காட்டியிருக்கிறேன். எப்படி இருக்கக்கூடாது என்பதை சொல்லும் படம்தான் நடுநிசி நாய்கள் என்கிறார் கௌதம். க்ரைம் த்ரில்லர் வகையைச் சேர்ந்த இந்தப் படத்தில் பாடல்களோ பின்னணி இசையோ கிடையாதாம். வீரா என்பவர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். சமீராவுக்கு இதில் விலை மாது வேடமாம். வழக்கமான படம் போல் இரண்டரை மணி நேரம் இழுக்காமல் ஒன்றரை மணி நேரத்தில் முழுப்படத்தையும் எடுக்க திட்டமிட்டுள்ளாராம்.

சமீபத்தில் நடந்த சங்கத் தேர்தலுக்குப் பிறகு பல்வேறு கசப்பு நிகழ்ச்சிகளும் அரங்கேறியிருக்கிறது. கூட்டமொன்றில் பேசிய சக்தியான பாண்டியார் எனக்கு எதிரா வாக்குப் போட்டவனையெல்லாம் காலி பண்ணிடுவேன் என்று சாமியாடியிருக்கிறார். இதை ரசித்து சிரித்தவர்களில் பள்ளிகொண்ட பெருமானும் ஒருவர்.

## சாந்தி தரும் அர்ச்சனா



மாதத்துக்கு நான்கு குருவி லேகிய படங்கள் கோடம்பாக்கத்தில் வெளியாகிக் கொண்டுதான் இருக்கின்றன. கதையே இல்லாமல் காசு பாக்கலாம் என்ற நம்பிக்கை இதுபோன்ற படங்களில் முலதனம். விரைவில் சாந்தி என்ற படம் திரைக்கு வரவிருக்கிறது. கதைதான் படத்தின் முக்கிய இடம். விடலை வாலிபர்கள் தான் படத்தின் இலக்கு. அர்ச்சனா என்பவர் இதில் நாயகியாக நடித்துள்ளார். அஜீத், விஜய்யுடன் நடிக்கும் பல நாயகிகளை விட அர்ச்சனா கொள்ளை அழகு. இந்த அழகை அப்படியே உரித்துக் காட்டும் படுக்கையறை காட்சி ஒன்று படத்தில் இடம் பெறுகிறது. தணிக்கைக்குழு இதனை அனுமதிக்குமா என்ற சந்தேகம் உள்ளது. இந்த சந்தேகம் இருந்ததாலா தெரியவில்லை. படுக்கையறை காட்சியின் ஒரு பகுதியை இணையத்தில் வெளியிட்டுள்ளனர். இந்த ஐந்து நிமிட காட்சியை பார்ப்பவர்கள் கண்டிப்பா [illegible] வார்களாம்.


நான் மகான் அல்ல- கார்த்தி, கஜால் அகர்வால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்பிரியர்களின் தொல்லை





பொது இடங்களில் புகைத்தலை மேற்கொள்ளும் 'புகைப்பிரியர்களால்' பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களின் நாகரிகமற்ற இச்செயன்முறைகளால் நோயாளர், சிறுவர் மற்றும் முதியோர்கள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

பொது இடங்களில் அழகான மட்டைகளில், 'புகைத்தல் உடல் நலனுக்குக்கேடு விளைவிக்கும்' 'புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது' முதலான வாசகங்கள் எழுதித் தொங்கவிடப்பட்டிருக்கும். ஆனால், அத்தகு இடங்களிலேதான் அந்தப் 'புகைப்பிரியர்' கூட்டமும் செறிந்து காணப்படும்.

பொது இடங்களிலும் குறிப்பாக சிற்றுண்டிச்சாலைகளில் இத்தகையோர் கூட்டம் எந்தநேரமும் தரிசனமளித்த வண்ணமே இருக்கும். இவர்களின் இத்தகைய செயற்பாடுகளால் அந்த உணவகங்களுக்குச் செல்வோர் முகஞ் சுளிப்பதையும் விரக்தியுறுவதையும் அவதானிக்க முடிகின்றது.

புகைப்பவர்களை விட அவர்கள் அருகே நின்று அதனைச் சுவாசிப்பவர்களுக்கே அதனால் அதிக தீங்கு உண்டாகும். இது சம்பந்தப்பட்ட சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் கவனத்திற்கொள்வதாகத் தெரியவில்லை.

இத்தகு சிற்றுண்டிச் சாலைகளின் முகப்பில் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது என்று எழுதப்பட்டு இருப்பினும் அங்கே மேற்படி கைங்கரியம் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கும். அத்துடன், பீடி, சிகரெட் மற்றும் சுருட்டு முதலானவைகள் அங்கு வைத்து விற்பனை செய்யப்படுவதுடன், அவற்றை வாங்குவோர் பற்ற வைப்பதற்கென தீப்பெட்டி மற்றும் லைற்றர் போன்றவற்றையும் இலவசமாகவே விற்பனையாளர் வழங்கியும் வருகின்றனர்.




இந்தப் புகைப்பிரியர்களின் அநாகரிகச் செயன்முறைகள் தொடர்பாக பாதிக்கப்பட்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

'நான் வைத்தியசாலையிலிருந்து களைத்து வந்து ஒரு 'ரீ' குடிப்போம் என நினைத்து தேநீர்ச்சாலை ஒன்றினுள் நுழைந்தேன். அங்கே உண்ட களையுடன் வாட்டசாட்டமாக இருந்த இருவர் 'சிகரெட்' புகைத்தவாறு இருந்தனர்.

எனக்குப் புகைப்பவர்களைக் கண்டாலே ஒவ்வாமை தான் ஏற்படும். என்னுள் பொங்கிய கொதிப்பையும் எரிச்சலையும் அடக்கிக் கொண்டு [illegible] நுழைந்தேன். 'நிலவுக்கு அஞ்சிப் பிரதேசம் சென்றால் அங்கும் நிலவு தான் வரும்' என்பதற்கிணங்க அதே கைங்கரியம் அங்கும் நடந்தது. ஒரு சோடாப் போத்தலை வாங்கிக் கொண்டு திரும்பி விட்டேன்.

களைப்புடன் பஸ்வண்டியினுள் இருந்தவேளை அங்கும் ஒரு 'புகைவண்டி' வந்தது. இவ்வாறான பொது இடங்களிற் புகைத்தலை மேற்கொள்வோர் மீது இதற்கு எதிரான அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தனர்?' என எரிச்சலுடன் கேள்வி எழுப்பினார்.

பொது இடங்களிற் புகைப்பிடிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றதே தவிர, அவ்வாறான இடங்களிற் புகைப்பவர்கள் மீது எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. பஸ் வண்டிகளுள்ளும் இத்தகு செயற்பாடுகள் நடைபெற்றே வருகின்றன.

அத்துடன் வைத்தியசாலைகளுக்குச் செல்வோருள் அங்குள்ள நடைபாதைகளிற் தரித்து நிற்போரும் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் புகைப்பிரியர் பட்டியலுள் பாடசாலை மாணவர்களும் கணிசமான இடத்தைப் பெற்றிருப்பது நாட்டின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளது. இவர்கள் பஸ் தரிப்பிடங்களில் அமர்ந்திருந்து வம்பளப்பதுடன் மட்டுமல்லாது போதைப் பொருள் பாவனைக்குட்படும் பெண்கள் மீதான சேஷ்டைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே பொதுமக்கள் நலன்கருதி பொது இடங்களிற் புகைபிடிக்கும் 'புகைப்பிரியர்களின்' அடாவடித்தனங்களைச் சம்பந்தப்பட்டோர் உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

எஸ்.ரூபனா

புகைத்தல் உடல் நலனுக்குக் கேடு | புகைத்தல் உடல் நலனுக்குக் கேடு | புகைத்தல் உடல் நலனுக்குக் கேடு | புகைத்தல் உடல் நலனுக்குக் கேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ்வார மெயிலில் இவர்...**



# நெல்சன் மண்டேலா

கடந்த 18 ஆம் திகதி சர்வதேச அளவில் தனி ஒரு மனிதரின் பிறந்த தினம் கொண்டாடப்பட்டுள்ளது.

தனி ஒரு மனிதனின் பிறந்த தினத்தை சர்வதேச அளவில் கொண்டாடப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்த ஐக்கிய நாடுகள் சபை கடந்த வருடம் நிறைவேற்றிய பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டே இம்முறை முதல் தடவையாக சர்வதேச அளவில் இத்தினம் கொண்டாடப்பட்டுள்ளது.

இவ்வாறு சர்வதேச அளவில் கொண்டாடப்பட்ட பிறந்த தினம் வெள்ளையின ஆட்சியின் ஒடுக்குமுறையிலிருந்து தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களை சுதந்திரம் பெறவைத்த அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் பிறந்த தினமாகும்.

தனி ஒரு நபரின் பிறந்த தினத்தை முழு உலகுமே கொண்டாடும் படியான தீர்மானத்தை நிறைவேற்றிய ஐ.நா.வின் முடிவு சரியானதுதான். ஏனெனில் அவ்வாறு கௌரவிக்கப்பட வேண்டியவர்தான் நெல்சன் மண்டேலா.

ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடி சிறைவாசம் அனுபவித்து விடுதலையானவர் நெல்சன் மண்டேலா.

தென் ஆபிரிக்காவின் வேஹோ நகரில் 1918 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் திகதி பிறந்தவர்தான் நெல்சன் மண்டேலா.தந்தை அந்நகரின் ஆளுநராக இருந்த கட்லா ஹென்றி பகன்யிஸ்வா ஆகும்.

ஆனால் மண்டேலாவின் தந்தைக்கு 4 மனைவிகள் இருந்தனர்.4 மனைவிகள் மூலம் 4 மகன்களையும் 9 மகள்களையும் பெற்றிருந்தார் பகன்யிஸ்வா.

இந்நிலையில் தந்தையின் மூன்றாவது மனைவிக்கே மண்டேலா மகனாகப் பிறந்தார்.பிறந்த நேரத்தில் மண்டேலாவுக்கு ரொலிஹ்லாஹற்லா என்றே பெயர் சூட்டப்பட்டிருந்தது.

அதேவேளை மண்டேலா தான் அவர்களது குடும்பத்தில் முதன்முதலில் பாடசாலைக்குச் சென்றவர் ஆவார்.பாடசாலையிலேயே அவருக்கு நெல்சன் என ஆங்கிலப் பெயர் சூட்டப்பட்டது.

வெஸ்லெயான் மிஹன் கல்லூரியில் மண்டேலா கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் அவரின் 9 ஆவது வயதில் தந்தையார் இறந்தார்.பின்னர் விடுதியுடன் கூடிய பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்.

பின்னர் அரச பரம்பரையினர் பயிலும் வெஸ்லயன் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்த மண்டேலா அக்காலப் பகுதியில் குத்துச் சண்டை மற்றும் ஓட்டம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார்.

பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து போர்ட் ஹரே பல்கலைக் கழகத்தில் கலைத் துறை பட்டதாரியானார்.

கல்வியைத் தொடர்ந்து 1948 இல் ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் இணைந்து கொண்டதன் மூலம் அரசியலில் புகுந்தார்.

அதேவேளை 1961 இல் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ஆயுதப்பிரிவின் தலைவரான மண்டேலா ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1962 இல் கைது செய்யப்பட்டு 27 வருடங்கள் ரொப்பன் தீவிலுள்ள சிறையில் அடைக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 இல் விடுதலை செய்யப்பட்டார்.

தனது சிறைவாசத்தின் போதே லண்டன் வெளிவாரிப் பல்கலைக்கழகத்தில் சட்டத் துறை பட்டதாரிக்கான கல்வியைத் தொடர்ந்தார்.

விடுதலையின் பின்னர் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டதன் பயனாக 1994 இல் பல கட்சிகள் பங்கேற்ற ஜனநாயகத் தேர்தல் நடைபெற்றது.தேர்தலின் பயனாக தனது 75 ஆவது வயதில் தென்னாபிரிக்காவின் முதலாவது ஜனநாயகத் தேர்தல் மூலமான ஜனாதிபதியான அதேவேளை, முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்ற பெருமையையும் தன்வசப்படுத்தினார்.

1994 முதல் 1999 வரை ஜனாதிபதி பதிவியிலிருந்த மண்டேலா சமாதானத்துக்கான நோபல் பரிசையும் பெற்றிருந்தார்.அமைதி முயற்சிகளை மேற்கொண்டிருந்தமைக்காகவே நோபல் பரிசு வழங்கப்பட்டது.


அதேவேளை,உலகின் முன்னணி 50 பல்கலைக்கழகங்கள் அவருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கியிருந்தன.அத்துடன்,250 விருதுகளும் அரசினால் பெறப்பட்டது.

ஜனாதிபதி பதிவியின் பின்னர் நல்லெண்ணத் தூதுவராக செயலாற்றிய அவர் எய்ட்ஸுக்கு எதிரான பிரசாரம் உள்ளிட்ட நலன்புரி பணிகளுக்கு தன்னாலான ஒத்துழைப்பை வழங்கி இருந்தார்.இதே வேளை மூன்று பெண்களை திருமணம் செய்த அவருக்கு 6 பிள்ளைகளும் 20 பேரப்பிள்ளைகளும் உள்ளனர்.

இன ஒதுக்கலுக்கு எதிரான தனிமனிதனின் முயற்சி தென்னாபிரிக்காவில் எவ்வாறான சாத்தியமான பெறுபேறுகளை பெற்றுத் தந்துள்ளன என்பதை உலகு புரிந்து கொண்டதன் விளைவே சர்வதேச அளவில் அவரின் பிறந்த தினத்தை வருடாவருடம் சர்வதேச தினமாக கொண்டாடுவதற்கான ஏற்பாடு.வாழ்க அவர் பணி.

**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியின் மையப்பகுதியில் என்ன இருக்கிறது...

பூமியின் மையப்பகுதியை நோக்கிச் செல்லும்போது அழுத்தம் அதிகரிக்குமா? குறையுமா? வெப்பமாக இருக்குமா? குளிர்ச்சியாக இருக்குமா? பல்வேறு கேள்விகளுக்கு விடை தெரியாமல் பலர் முழித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்தக் கேள்விகள் அனைத்திற்கும் பதில் இருக்கிறது. பூமியின் மேற்பரப்பில் காற்றின் அழுத்தம் மட்டுமே இருக்கும் என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால், பூமிக்கு உள்ளே அந்த இடத்தின் மேலுள்ள பாறைகளின் அழுத்தமும் காற்றின் அழுத்தமும் சேர்ந்திருக்கும்தானே! இதனால் தான் சுரங்கத்தின் உள்ளே கூட அழுத்தம் அதிகமாக உள்ளது. பூமியின் மையப்பகுதியை நோக்கி செல்லச் செல்ல அழுத்தமும் அதிகரிக்கிறது. வெப்பமும் அதிகரிக்கிறது.



பூமியின் மையப்பகுதி வெப்ப குழம்பாக இருப்பது தான் இதுபோன்ற வெப்பத்துக்குக் காரணம்.

பெரும்பாலும் இரும்பு மற்றும் நிக்கலால் ஆனது தான் பூமியின் உட்பரப்பு. அதன் உட்பகுதி திடப்பொருளாகவும் வெளிப்பகுதி திரவமாகவும் இருக்கும் என்று கருதப்படுகிறது. பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே பூமியின் மேல் ஓடு குளிர்ந்து உறைந்து போய் விட்டது. அதுதான் நாம் இப்போது பார்க்கும் பாறைகள், குன்றுகள் மற்றும் மலைகள்.

பூமியின் உள்ளகத்தைச் சுற்றி சுமார் 3 ஆயிரம் கிலோமீற்றர் பருமன் உள்ள 'மாண்டில்' எனும் அடுக்கு உள்ளது. இந்த அடுக்கின் பலம் குன்றிய சில பகுதிகளில் விரிசல்கள் ஏற்படும். அந்த விரிசல்களில் அவ்வப்போது பீறிட்டு எழும் நெருப்புப் பிழம்புகள்தான் 'எரிமலைகள்'.

# உவர்நீரைச் சுத்திகரிக்க இலங்கையில் இயந்திரம் கண்டுபிடிப்பு


நீரிலுள்ள உவர்த்தன்மையை நீக்குவதற்கான இயந்திரமொன்றை இலங்கை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தப் புதிய உபகரணம் அடுத்த மாதம் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படுமெனத் தெரிய வருகிறது.

தற்போது நீரில் காணப்படும் உவர்த்தன்மை காரணமாக குருநாகல், அநுராதபுரம், பொலநறுவ, கதிர்காமம், மொனராகலை உள்ளிட்ட பல பிரதேசங்களில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

உவர்த்தன்மையான நீரைப் பயன்படுத்துவதன் காரணமாக மக்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுவதாக ஆய்வு நிலையத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

# உங்களுக்கென்று ஒரு தனி விமானம்



வாகனப் போக்குவரத்து வாழ்க்கையில் ஒரு அங்கமாக மாறிவிட்டது. பஸ், ரயில், கார் என பலவித வாகனங்களிலும் எளிதில் பயணம் செய்து விடுகிறோம். ஆனால், விமானப் பயணம் மட்டும் எல்லோருக்கும் அமைந்து விடுவதில்லை.

விமானப் பயணமே அலாதி இன்பம் தரக்கூடியது. பணக்காரர்களுக்கு மட்டும் விமானப் பயணம் எளிதில் கிடைத்து வந்தது.

விமானம் பறப்பதை அண்ணார்ந்து பார்த்து ஆச்சரியப்படும் பலருக்கும் விமானப் பயணத்தை சாத்தியமாக்க வந்துள்ளது ஒரு புதுமையான விமானம். தனி மனிதருக்கான இந்த விமானத்தில் நீங்கள் ஜாலியாக அலுவலகத்திற்கோ அல்லது வேறு எந்த இடங்களுக்கோ சென்று வரலாம்.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா விண்வெளி பொறியியலாளரான மார்க் மூரே இந்த விமானத்தை வடிவமைத்துள்ளார்.

'புபின்' எனப்படும் ஒருவகை கடற்பறவையை மாதிரியாகக் கொண்டு இது தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் நீங்கள் 50 மைல் தூரம் வரை பயணம் செய்யலாம். மணிக்கு 150 மைல் வேகத்தில் பறக்கக்கூடியது.

உள் மற்றும் வெளிப்புறங்கள் வித்தியாசமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது செங்குத்தாக மேலே எழும்பி பறக்கும் வகையிலும் தரையிறங்கும் போது முதலில் வால்பகுதி நிலத்தில் படும்படியும் உருவாக்கப்பட்டுள்ளது. மின் ஆற்றல் மூலம் இயங்கக்கூடிய இந்த விமானம், 12 அடி நீளமுடையது. இறக்கையின் நீளம் சுமார் 14.5 அடி. இந்த விமானத்தை தன்னுடைய முனைவர் பட்ட ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக மூவரே உருவாக்கியுள்ளனர். இந்த விமானத்தின் எடை 136 கிலோ. தன்னுடைய எடைக்கு சரிசமமாக எடையைத் தாங்கும் திறன் உடையது.

# புன்னகை சிந்தும் மோனாலிசா ஓவிய ரகசியத்தை கண்டுபிடித்த விஞ்ஞானிகள்


மாறாத புன்னகை சிந்தும் உலகப்புகழ் மிக்க மோனாலிசா ஓவியத்தை பிரான்ஸ் ஓவியர் லியோனார் டோ டா வின்சி என்பவர் வரைந்தார். புன்னகை பூக்கும் எழில்மிகு ஓவியத்தின் ரகசியம் குறித்து பலர் ஆய்வு செய்து வருகின்றனர்.

ஓவியர் லியோனார்டோ டாவின்சியின் ஓவியங்கள் பாரிஸ் நகரின் லூவர் அருங்காட்சியகத்தில் உள்ளது. அங்குள்ள மோனாலிசா உள்ளிட்ட 7 ஓவியங்களை விஞ்ஞானிகள் பிலிப்வால்டர் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு ஆய்வு செய்தனர்.

மோனாலிசா உள்ளிட்ட ஓவியங்கள் மீது எக்ஸ்ரே கதிர்களை பாய்ச்சி பரிசோதனை செய்தனர். அதில் மோனாலிசா ஓவியத்தை லியோனார்டோ டாவின்சி 30 அடுக்கு பெயின்டிங்(வர்ணம்) செய்து இருப்பது தெரியவந்தது.

மேலும் ஒவ்வொரு வர்ணக் கலவை அடுக்குகளும் 40 மைக்ரோ மீற்றர் அதாவது மனிதனின் மயிர் தடிமன் அளவுக்கு நுண்ணியமாக வரையப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டது.


மேலும் மோனாலிசா ஓவியத்தில் மேங்கனிஷ் ஓசைட்டு என்ற இரசாயன கலவையின் மூலம் ஓவியர் டாவின்சி வரைந்துள்ளார். ஓவியம் பளபளப்பாக இருப்பதற்கு அதன் மீது அவர் காப்பர் உலோகத்தை பயன்படுத்தியுள்ளார்.



இந்தத் தகவலை விஞ்ஞானி பிலிப்வால்டர் தெரிவித்துள்ளார். ஓவியர் டாவின்சி பயன்படுத்திய தொழில் நுட்பத்துக்கு ஸ்புமாடோ என்று பெயர் என அவர் கூறினார்.

மோனாலிசா ஓவியத்தை டாவின்சி கடந்த 1503 ஆம் ஆண்டு வரையத் தொடங்கினார். புளோ ரென்டைனை சேர்ந்த வியாபாரி பிரான்சிஸ்கோ டெல்ஜியோகாண்டோவின் மனைவி லிசா கெராந்தினி இந்த ஓவியத்துக்கு மாடலாக இருந்தார்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# நமது மூளைக்கும் பறவை மூளைக்கும் தொடர்பு

மனிதர்களின் மூளைக்கும் பறவைகளின் மூளைக்கும் அமைப்பு ரீதியாக ஒற்றுமை இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இது ஒரு புதிய கண்டுபிடிப்பு. மனிதர்கள் மற்ற பாலூட்டிகளின் மூளைகளானது பறவைகள் போன்ற பிற உயிரினங்களின் மூளைகளில் இருந்து வேறுபட்டவை என்று தான் நூறாண்டுகளுக்கு மேலாக விஞ்ஞானிகள் நம்பி வந்தனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இது தொடர்பான ஆய்வை மேற்கொண்டனர். அப்போது மனிதர்கள் போன்ற பாலூட்டிகளுக்கும் கோழி போன்ற பறவை இனத்துக்கும் மூளையில் குறிப்பிடத்தக்க சில ஒற்றுமைகள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

இதனால் பாலூட்டிகள் தனித்தன்மை வாய்ந்தவை என்ற இதுநாள் வரையிலான வாதம் அடிபட்டுப்போகும் என்று அந்த ஆய்வுக் குழுவைச் சேர்ந்த பேராசிரியர் ஹார்வி கார்ட்டன் தெரிவித்திருக்கிறார்.

மனிதர்கள் உள்ளிட்ட பாலூட்டிகளின் மூளை நன்கு வளர்ச்சியடைந்தது, மற்ற உயிரினங்களை விட மேம்பட்டது என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் பாலூட்டிகளின் மூளையில் கேட்புத் திறனுக்கான பகுதியும் பறவைகளின் மூளைகளில் அதே பகுதியும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருப்பது தெரிய வந்திருக்கிறது.

30 கோடி ஆண்டுகளுக்கு முன் பறவைகளும் பாலூட்டிகளும் ஒரு பொதுவான மூதாதையரில் இருந்து உருவானதால் இந்த ஒற்றுமை ஏற்பட்டிருக்க கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# சுடலை ஞானம்

சுதுமலைத் தம்பி
ஜீ.ஷஜீவன்

எங்கோ அலறி ஓய்ந்து கொண்டிருக்கும் ஆந்தையின் குரல்,இதோ இப்போது மெல்ல ஆரம்பித்திருக்கும் ஓநாயின் ஊளைச் சத்தம்! அந்த இடத்தை விட்டு வேகமாய் நகரத் தன்னை தயார்படுத்திகொண்டிருக்கும் பேய்க்காற்று! ஒன்றோடு ஒன்று அடித்து மோதிக்கொள்ளும் ஆலம் விழுதுகள் ஆள் நடமாட்டமில்லாத அந்தக் கறுத்தப் பாதை, பயந்து பயந்து காய்ந்து கொண்டிருக்கும் முழு நிலவு,ஒரு கரு மேகத்தைத் தன்மேல் இழுத்துப் போர்த்துக் கொள்கின்றது! பொதுவாக அந்த இடத்துக்குப் போக எவரும் விரும்புவதில்லை! ஏனென்றால் அது ஒரு மயானம்!

சற்று மெதுவாக கதையுங்கள் ஒரு மனிதனின் குரல் அந்த பயங்கர இடத்திலும் கேட்கின்றது! 'இறைவா எல்லோரும் இறந்த பின் இங்கே வருவார்கள்,என்ன சோதனை? என் விதி இறப்பதற்காகவல்லவா என்னை இங்கு கொண்டுவந்து விட்டிருக்கிறது! எந்நிலை எவருக்கும் வரக் கூடாது!' மெல்ல அமைதி பெறுகிறது அந்தக் குரல்! இப்போது யாரென்று நிலவு பார்ப்பதற்கு தான் போர்த்தி இருந்த கருமேக ஆடையை மெல்ல விலத்துகின்றது! எமக்கும் அந்த உருவம் நிலவொளியில் மெல்லத் தெரிகின்றது. நெடிய உருவம், ஒரு வெள்ளை உடை அணிந்திருந்தது!சுருக்கு போட்ட கயிறு ஆலமரத்தில் கட்டப்பட்டிருந்தது.இதோ இதோ அந்த உருவம் அடுக்கி வைக்கப்பட்ட அந்தக் கல்லின் மீது ஏறிவிட்டது!ஆம் இன்னும் சற்றுநேரத்தில் இந்த உலகிலிருந்து ஒரு உயிர் பிரியப்போகின்றது. நிலவொளியிலே அது சங்கமமாகப் போகின்றது!இல்லையே அதற்கிடையில் அந்த அமைதியை கலைக்கும் வகையில் மேலும் ஒரு தடித்த குரல்,


'யோவ்,யாரப்பா அது!டேய்....இந்த நேரத்தில் இங்க என்ன செய்யறா!?' மிகப் பெரிய ஏமாற்றம் அவனுக்கு! மரண வாயிலுக்கு சென்றவனைத் தடுத்து நிறுத்தியது யார்?அந்த மரண சாம்ராஜ்ஜியத்தின் அங்கத்தவனாக இருந்தவனை வழிமறித்தது யார்? ஆம் இப்போது அவனுடைய உருவமும் நன்கு தெரிகின்றது! சற்றுக் கட்டுமஸ்தான உடலமைப்பு நீரைக்கண்டிராத கால்கள் மரத்துப் போயிருந்தன. தலையில் எண்ணெய் வைத்துக் குடுமி போல் கட்டப்பட்ட அவன் தலை மிக நேர்த்தியாக வாரப்பட்டது! உடம்பில் ஒரு பெனியன் முழந்தாள் தெரியுமளவு ஒரு சாறம்.கையில் ஒரு கைத்தடி,மறுகையில் ஒரு சிமிலி விளக்கு! புரிகின்றது அவன் இந்தச் சுடலையைக் காத்துவரும் கைங்காரி!

இப்போது தூக்கு மேடையில் நின்றதைப்போல நின்றவனை அவன் தடுத்து கீழே தள்ளிவிட்டான்! 'யார் தம்பி நீ? இந்த நேரத்தில் அதுவும் இந்த இடத்தில் என்ன காரியம் செய்ய வந்திருக்கிறாய்? இந்த வயசுல தற்கொலை செய்யுமளவுக்கு அப்படி என்ன கவலை உனக்கு?' 'சாக வந்த என்னை எதுக்கு காப்பாத்தினீங்க? இன்னும் நான் எதுக்கு உயிரோட இருக்கணும்? நான் இந்த உலகத்தில் பிறந்து பட்டதெல்லாம் போதும். பல தடவ சாக முயற்சிக்கேக்கையும் எப்படியோ பிழச்சிட்டேன்! அதால இங்க வந்தா இங்கேயும் இப்படி ஆகிப்போச்சே!சே! கடவுள் எனக்கு சோதனை தர்றத்துக்காகவா இப்படி விதிய விட்டு என் வாழ்க்கேல விளையாடுறார்!' என்றவன் கண்கள் கலங்கி கைகளால் முகத்தைப் பொத்தியபடி ஆலமரக் கட்டிலே மெதுவாக அமர்ந்துவிட்டான்!

சுடலையை நம்பிப் பிழைப்பவனோ தனக்குள் சிரித்தவாறு அவனருகில் அமர்ந்து 'தம்பி,உங்களப் பார்த்தா படிச்ச புள்ள போலத் தெரியுது! வாழ்க்கை என்கிறது நாங்க வாழ்றத்துக்குத்தான் கடவுள் கொடுத்தார்! வாழ்க்கையை ஆரம்பிக்க பிறப்பு கொடுத்த கடவுள்தான் சொந்த பந்தங்களையும் கொடுத்தவர்! அவற்றை நல்லா புரிஞ்சு வைக்கிறதும் சந்தோசமா வைச்சுக்கிறதும் நம்ம கையில் தான் இருக்கு, எமக்கு வேண்டியது இழந்து விட்டா இறப்புத்தான் முடிவாகாது தானே,அதை முயற்சித்துப் பார்க்கலாம்! எப்பவோ சாகப் போற நாம் அதுக்கிடலே பிரச்சினைகளை சுமுகமாக்க முயற்சிக்கிறத விட்டுட்டு வாழ்க்கையை முடிக்க கிளம்புறது படு முட்டாள்தனமான வேலையல்லோ! கடவுள் எல்லோத்துக்கும் எல்லாத்தையும் கொடுத்துத்தான் இருக்கிறார்!அதுகள நாம் தான் தேடி எடுக்கணும். இத 'கோட் கிவ்ஸ் எவிறி பேட்ஸ் இற்ஸ் ஃபூட்ஸ் பற் நெவர் ஹொப்ஸ் இற் இன்த நெஸ்ட்' என்று ஆங்கிலத்தில் சொல்லுவினம்' என்றவாறு தன் பிரசங்கத்தை முடித்தான்.

சாவைத் தேடி வந்தவனுக்கு சாக் அடித்தாற் போல இருந்தது.இந்தத் தொழில் புரியும் இவனிடம் இவ்வளவு அறிவா? அடக்க முடியாது அவனது உள்ளம் 'ஐயா உங்ககிட்ட இவ்வளவு அறிவு இருந்தும் எதுக்கு இந்த வேல நீங்க...' மீண்டும் சிரித்துக் கொண்ட மயானக் காப்போன் 'ஆமா நானும் படிச்சேன் தான்! அன்றைய சமூகம் என்னை என் தொழில் என்னப்பன் தொழில் கொண்டு தான் பார்த்தது! இங்கிலிஸ்காரர் என்னை படிப்பிச்சு விட்டுப் போனாலும் இந்த சமூகம் என்னைத் தட்டித்தான் கழிச்சது! அதற்காக நான் சாகவில்லையே மாறாக சண்டையும் செய்யவில்லை! ஆனால் இனிவரும் சந்ததி இந்தச் சமூகத்துக்கு எதிராகப் போராட வேண்டும்!கண்ணைத் திறக்க வேண்டும் அத விட்டுட்டு மனமுடைஞ்சு சாக வந்தா என்ன கதி' வார்த்தைக் கணைகள் பட்டு வந்தவன் மனமும் திறந்து கொண்டது!

எல்லோருக்கும் இறந்து இறுதி ஊர்வலமாய் போய் சுடலையை அடையும்போது தான் 'சமரசம் உலாவும் இடம்' என்று சுடலை ஞானம் பிறக்கும்! இங்கே இறப்பைத் தேடி போனவனுக்கு சுடலையில் ஞானம் பிறந்தது! பலவாறு நன்றி பாராட்டி அவ்விடத்தை விட்டு அவன் அகன்றான்! எதற்காக சாக வந்தான் என்று கூட கேட்கவில்லை! அவனை சாவிலிருந்து தடுத்ததே பெரிய திருப்தி என்றவாறு காப்பானும் மெல்ல ஓரமாய் கிடந்த தன் ஓட்டைச் சிறுகுடில் நோக்கி நடந்தான்! பின் உலகம் விடிந்து கொண்டு வந்தது!



நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னவள்...

வண்ண மின்குமிழ்களெல்லாம் வாடி
முகங்கவிழ்ந்தன! என்னவளின் சிரிப்பில்.
எண்ணம் பலகொண்ட புலவரெல்லாம்
ஏடெடுத்து பாட்டிசைத்தனர்-என்னவளின் வனப்பில்!
மின்னும் சின்னத்தாரகைகள் மலர்தூவும்
என்னவளின் வருகையில்! வானவீதி
பொன்னாய் ஜொலிக்கும் என்னவளின் புன்சிரிப்பில்
மன்னவரும் எண்ணம் மறப்பர் என்னவள் பார்வையில்!
உவமைகள் திண்டாடும் அவள் முகம் பார்த்து
வையகம் மண்டாடும் அவள் வருகைக்காய்!
குவலயம் கொண்டாடும் அவள் எமக்கென்று!
கேவலம் யான் எந்த மூலைக்கு அவளைப்பாட!
கொத்தாய் அவள் மீது என் காதல் பூக்கும்!
இத்தனைக்கும் அவள் முகம் காண நான் வான்
பார்க்க வேண்டும்
விந்தை என்னவெனில் நானவளை அழைப்பது
என்னவளென்று!
இந்த உலகவளை அழைக்கும் நிலா என்று!

**ஜீ.ஷஜீவன், சுதுமலை.**




## நினைவுகளுடன்...

நாளை உங்களுக்காய்
இன்று நாங்கள்...
சொல்லி சென்றவர்கள்
நினைவுகளுடன் எம்மை
தழுவிச் செல்கிறது
ஜூலை காற்று....

**ம.வதனன்**

## விடை தெரியாத வினாக்கள்!

பள்ளிப் பருவத்திலிருந்து
விடை தெரியாத வினாக்களை
கேட்டுக் கேட்டு எனை
விரக்திக்கே தள்ளிவிட்டனர்.

சின்ன வயதில் நான்
என்னவாக வேண்டுமென்று
என்னிடம் கேட்காமலேயே
அவர்களுக்கான விடையை
என்னில் தேடியபோது நான்
காணாமல் போய்விட்டேன்.

நேற்றுக் கூட
நண்பன் கேட்டான்
'என்ன வேலை பார்க்கிறாய்?'
மனைவி கேட்கிறாள்
பிந்தி ஏன் வருகிறீர்?
விடை தெரிந்த வினாக்களை
ஏன் கேட்க மறுக்கிறீர்?

**மூதூர் முகைதீன்**

## நன்றி...

அங்கே!
ஒரு தெருநாய்
எழுந்து நின்று தன்
வாலை;
ஆட்டி மகிழ்கிறது;
என்றோ வீசி எறிந்த;
பாண் துண்டுக்காய்
இங்கே!
வருடங்கள் இருபது
வறுமையின் பிடிக்குள்
சிப்பிக்குள் முத்தாய்;
காத்து வளர்த்த
இரத்த உறவொன்று;
பாரா முகமாய்;
வசை மொழி பேசி;
ஏளனப்படுத்துகிறது;
உழைத்து; உருக்கு
லைந்து
வயது முதிர்ந்த;
பாசமிகு பெற்றோரை
அங்கு!
ஒருவேளை உணவு;
வாலாட்டி நன்றி
சொல்லி;
மௌன மொழி பேசுகிறது
வாய்பேசாமிருக விலங்கு
இங்கு!
இருபது வருட பாச
உறவை;
கானல் நீராக்கி;
மிருகவிலங்கிடம் தோற்
கிறது
நன்றி மறந்த
மனித விலங்கு
இரண்டிற்கும் இடையே
வேறுபாடு ஒன்றுதான்
அது! சிந்திக்கத் தெரியா;
ஐந்தறிவு விலங்கு
இது! சிந்திக்கத் தெரிந்த;
ஆறறிவு விலங்கு.

**கற்பிட்டி வஹாப்**

## இறக்கும்போதும் சிரிப்பு

என்னை
இப்போதே கொல்லுங்கள்
இன்முகமாய்
ஏற்றுக்கொள்கிறேன்

உயிரோடு வைத்தே
என்னுடலை வெட்டுங்கள்
நான் அழவே மாட்டேன்

எந்தன்
இறப்பின் பின்னால்சரி
நிச்சயம் நீங்கள்
நிம்மதியாய் வாழ்வீர்கள்

இதுவரை
நான் வாழ்ந்ததே
என்றுறவே உங்களுக்காய்
உயிரும் உடலும்
உங்களுக்கே சொந்தம்

உங்களுக்கு
உறைவிடம் உருவாகவே
உருவாக்கினேன்
பனைமரமாய்

**யோ.புரட்சி**

## புரிந்துகொள்வீர்

ஆண் பெண்ணென்று இரு சாதி
அதற்குள்ளும் பல சாதி
சாதி சொல்பவன் சாக்கடை மனிதன்
வியாதி தரும் நோய்க்காவியாவான்

சாதி பார்க்காது சாதித்துப்பார்
உன் வாழ்வில் என்றும்
புது வசந்தம் வீசட்டும்

புதியவர்களே புரிந்து கொள்ளுங்கள்
உதட்டுச் சாயம் தான் சாதி
மாறி மாறி ஏன் கேலி
மனதை பார்ப்பதுதான் நியதி

பாரதி சொல்லும கதையைக் கேள்
பசுமையான உலகைப் பார்
சாதி பார்த்து பிரிக்காதே
ஜனனம் வழி வந்ததுதான் மரணம்

பகவத் கீதையைப் படி
உன்னையே-நீ அறிவாய்
ஒளிபெற்று வாழ்ந்திடுவாய்

**பதியூரன்,**
**ஆரையம்பதி.**

## சீதனம்... புரியவில்லை

கடமை என சொல்லி
கற்றையாக பணம் திரட்டும்
சீதன வெறி பிடித்த
சீமான்களே!
சீதனம் என்ற பெயரில்
பெண்ணின் வாழ்வை
சீரழிக்கும்
உத்தமரே!
சீதனம் வாங்குவதற்கு
சிறப்பாக வழி தேடி
அதையே நியாயப்படுத்தும்
ஆடவரே!
சீதனம் என்ற பெயரில்
அறிவு,அழகு
அழகான ஒரு வீடு
நகை,படிப்பு
நல்ல சம்பள உத்தியோகம்
இவற்றை எல்லாம்
கேட்கிறார்கள்
இவை எல்லாம்
சீதனம் தானா?
சீதனம் என்றதற்கு
அர்த்தம் தான் ஏது?
அர்த்தத்தை தேடுகிறேன்
இதுவரை புரியவில்லை

**சுபா.**

## பிடிக்கும்...

யாருமில்லாத் தனிமையில்
இயற்கையின்
அரவணைப்பில்
இன்பமாக கவிபுனைய
இறுதிவரை பிடிக்கும்.

இறுக்கமான மனநிலையில்
உட்கார்ந்து அழும் போது
மென்மையாய் வருடும்
மழலையின் ஸ்பரிசம்
பிடிக்கும்.

அதிவேகக்காற்றில்
அலைபாய்ந்து சண்டையிட்டு
ஜெயித்து நற்கும் கூந்த
லினை
பார்த்து நிற்கப் பிடிக்கும்

பந்தா காட்டாத பண்புமிகு
நல் உள்ளங்களை
நட்பாய்க் கொள்ள பிடிக்கும்

துணிவுடனே பணிவுள்ள
இதயங்கள் யாவையுமே
ரொம்ப ரொம்ப பிடிக்கும்.

**ர.கீதா, சுன்னாகம்.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில் வரவேண்டுமெனில்
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கரின் உடல் பருமன் பிரச்சினையால் நஷ்டமடையும் திரையரங்கு உரிமையாளர்கள்




அமெரிக்கர்களின் உடல் பருமனாகிக் கொண்டு வருவது பெரியதொரு பிரச்சினையாக உருவெடுத்திருப்பது பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அல்லவா?

இதுஒரு அண்மைக்காலப் பிரச்சினையல்ல. கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே அமெரிக்கர்கள் உயரத்திலும் உடல்பருமனிலும் வளர்ச்சியடைந்து கொண்டே வந்திருக்கிறார்கள்.

*Theatre Projects Consultants* என்ற பெயரிலான திரையரங்கு நிர்மாண நிறுவனம் அண்மையில் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் கடந்த நூற்றாண்டில் தியேட்டர்களில் ஆசனங்களின் அகலம் படிப்படியாக அதிகரித்து வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க திரைப்பட ரசிகர்களின் உடல் பருமன் அதிகரித்து வந்ததே இதற்குக் காரணம் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

1990 ஆம் ஆண்டில் இருந்து 1990 ஆம் ஆண்டுவரை தியேட்டர்களில் ஆசனங்களின் அகலம் 19 அங்குலத்தில் இருந்து 21 அங்குலமாக அதிகரித்திருக்கிறது. கடந்த 20 வருடகாலத்தில் ஆசனங்களின் அகலம் ஒரு அங்குலத்தால் அதிகரித்திருக்கிறது. கால்களை நீட்டிக்கொண்டிருப்பதற்கான இடத்தின் விஸ்தீரணமும் ஆசன வரிசைகளுக்கு இடையிலான வெளியும் அதிகரித்திருக்கின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பல வருடங்களாக மக்களின் உயரமும் உடல் பருமனும் அதிகரித்துக் கொண்டுவந்திருப்பதால் அவர்கள் தியேட்டர்களின் ஆசனங்களில் வசதியாக அமர்ந்திருந்து திரைப்படங்களை ரசிப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகிறார்கள். தற்போதைய ஆசனங்கள் 30 அல்லது அதற்குக் கூடுதலான வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்டவையாகும் என்று அறிக்கையைத் தயாரித்தவரான கம்பனியின் பணிப்பாளர்களில் ஒருவரான ஜோன் கொய்ன் தெரிவித்தார்.

ஆசனங்களைப் பெரிதாக்குவதென்பது தியேட்டர் உரிமையாளர்களுக்குப் பெரும் பணச்செலவை ஏற்படுத்துகிறது. கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் திரையரங்குகளில் அமர்ந்திருந்து திரைப்படங்களை ரசித்தவர்களின் எண்ணிக்கையில் அரைவாசிப் பேரே தற்போது திரையரங்குகளில் அமரக் கூடியதாக இருக்கிறது. ஆசனங்களைப் பெரிதாக்கியதன் விளைவே இதுவாகும். திரையரங்கு மண்டபங்களின் அளவும் அவற்றை நிருமாணிப்பதற்கான செலவும் சுமார் 30 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேற்படி திரையரங்கு நிருமாண நிறுவனம் 70 நாடுகளில் 1200 க்கும் அதிகமான தியேட்டர்களை நிருமாணித்திருக்கிறது. அமெரிக்காவில் அமைக்கப்பட்ட தியேட்டர்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டே அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

1960 ஆம் ஆண்டுக்கும் 2000 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் வயதுவந்த *(Adult)* அமெரிக்கரின் சராசரி எடை 15 சதவீதத்தினால், அதாவது 11 கிலோவினால் அதிகரித்திருந்தது என்று நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நிலையங்களின் புள்ளி விபரங்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது.

ரசிகர்களின் சௌகரியத்துக்காகவும் விளையாட்டு அரங்குகள் போன்ற இடங்களில் காணப்படும் அகலமான ஆசனங்கள் மற்றும் வசதிகளுக்கு இணையானதாகத் தியேட்டர்களிலும் வசதிகளை அதிகரிக்கவேண்டிய தேவை கருதியும் தியேட்டர்களின் ஆசனங்களின் அகலத்தையும் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உரிமையாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

## வயோதிபத் தம்பதியின் விவாகரத்து



98 வயது கணவரும் 95 வயது மனைவியும் விவாகரத்துச் செய்வதற்காக ஒரு சட்டத்தரணியிடம் சென்றனர்.

'எவ்வளவு காலம் நீங்கள் மணவாழ்க்கையை நடத்தியிருக்கிறீர்கள்' என்று சட்டத்தரணி கேட்ட போது இருவரும்'மிகவும் கஷ்டமாக 75 வருடங்கள்' என்று பதிலளித்தனர்.

'அவ்வளவு நீண்ட காலம் ஒன்றாக வாழ்ந்து விட்டு எதற்காக இப்போது விவாகரத்துச் செய்துகொள்வதற்கு முடிவெடுத்தீர்கள்' என்று சட்டத்தரணி கேட்டார்.

வயோதிபத் தம்பதியரிடமிருந்து வந்த பதில்;

'பிள்ளைகள் இறக்கும் வரைக் காத்திருக்கவேண்டியிருந்தது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹொக்கிப் பெண்களுக்கு பாலியல் தொல்லை



இந்திய மகளிர் ஹொக்கி அணியைச் சேர்ந்த ரஞ்சிதா தேவி என்ற வீராங்கனை பயிற்சியாளர், வீடியோகிராபர் மற்றும் பயிற்சிப் பிரிவைச் சேர்ந்த அனைவர் மீதும், பாலியல் தொல்லை தந்து கடுமையாக மன உளைச்சலை ஏற்படுத்தியதாக புகார் கொடுத்தார். இதையடுத்து நடந்த விசாரணைக்குப் பின்னர் முதல் கட்டமாக வீடியோகிராபர் நீக்கப்பட்டுள்ளார்.

பயிற்சியாளர் உள்ளிட்ட பிறர் மீது விசாரணை நடக்கவுள்ளது. இந்திய ஹொக்கி வட்டாரத்தில் இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய ஹொக்கி நிர்வாகம் அடுத்தடுத்து பல்வேறு சர்ச்சைகளை சந்தித்து வருகிறது. இந்தியாவின் தேசிய விளையாட்டான ஹொக்கி ஒரு காலத்தில் உச்சத்தில் இருந்தது. ஆனால், கிரிக்கெட்டின் வரவாலும், ஹொக்கியை சரிவர நிர்வகிக்காத காரணத்தாலும், இன்று அதல பாதாளத்தில் கிடக்கிறது. அதை சரி செய்யும் முயற்சிகள் கடுமையாக நடந்து வரும் நிலையில் சமீப காலமாக பல்வேறு சர்ச்சைகளால் ஹொக்கி மேலும் மேலும் அடி வாங்கி வருகிறது.

இந்த நிலையில், மகளிர் அணியைச் சேர்ந்த வீராங்கனை, ரஞ்சிதா தேவி தனக்கு பயிற்சியாளர் பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்து வருவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து ஹொக்கி இந்திய நிர்வாகத்திற்கு அவர் கொடுத்துள்ள புகார்கடிதத்தில், கனடா, சீனாவுக்கு சமீபத்தில் இந்திய மகளிர் ஹொக்கி அணி சென்றிருந்தபோது, தலைமைப் பயிற்சியாளர் கௌசிக், வீடியோகிராபர் பசவராஜ் மற்றும் பயிற்சியாளர் குழுவிலிருந்த அனைவரும் என்னை ஆசைக்கு இணங்க வலியுறுதினார்கள். நான் மறுத்ததால் மிகவும் ஆபாசமான வார்த்தைகளால் என்னைத் திட்டினர். அசிங்கமாக விமர்சித்தனர்.

நான் மட்டுமல்லாமல் அணியிலுள்ள பிற வீராங்கனைகளும் கூட இவர்களது பாலியல் துன்புறுத்தலால் பெரும் மனஉளைச்சலடைந்துள்ளோம் என்று கூறியிருந்தார்.

மிகக் கடுமையான இந்த புகாரைத் தொடர்ந்து ஹொக்கி இந்திய நிர்வாகம் நான்கு பேர் கொண்ட குழு ஒன்றை விசாரணைக்காக அமைத்தது. இந்தக் குழுவின் தலைவராக ராஜீவ் மேத்தா அறிவிக்கப்பட்டார். முன்னாள் வீரர்களான ஜாபர் இக்பால், அஜீத் பால் சிங், சுதர்சன் பட்நாயக் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்தக் குழு நடத்திய விசாரணைக்குப் பின்னர் புகார் கூறப்பட்ட வீடியோ கிராபர் முதல் ஆளாக நீக்கப்பட்டுள்ளார். ரஞ்சிதா தேவி கொமன்வெல்த் ஹொக்கி அணிக்கான உத்தேச வீராங்கனைகள் பட்டியலில் இருக்கிறார்.

இந்தச்சம்பவம் குறித்து ராஜீவ் மேத்தா கூறுகையில்;

தேசிய வீராங்கனையான ரஞ்சிதா கூறிய புகார்கள் மிகக் கடுமையானவை. இந்தப் புகாருக்குள்ளான வீடியோகிராபரை நீக்கிவிட்டோம். மேலும் அவர்மீது கடும் நடவடிக்கைஎடுக்குமாறு இந்திய விளையாட்டு ஆணையகத்திற்கும் பரிந்துரைத்துள்ளோம்.

கௌசிக் கடந்த பத்து வருடங்களாக பயிற்சியாளராக இருந்து வருகிறார். இதுவரை அவர் மீது எந்தப் புகாரும் வந்ததில்லை. ஆனால், இப்போது கடுமையான புகார் வந்துள்ளது. அது குறித்த முடிவெடுக்கப்படும் வரை அவர் மகளிர் அணியின் பயிற்சியாளராக செயல்பட மாட்டார். மேலும் கொரியாவில் நடைபெறவுள்ள ஆசிய சம்பியன் கிண்ண போட்டிக்கும் அவர் அணியுடன்செல்ல மாட்டார் என்றார்.



தன் மீதான செக்ஸ் புகாரைத் தொடர்ந்து பயிற்சியாளர் பதவியிலிருந்து கௌஷிக்ராஜிநாமாசெய்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது;

என்மீதான புகார் ஆதாரமற்றது. எனக்கு எதிராக சதி நடந்துள்ளது. நான் அப்பாவி. உண்மை ஒரு நாள் வெல்லும் என்ற நம்பிக்கை உள்ளது.

ரஞ்சிதா தேவி என்ற வீராங்கனை என் மீதான வெறுப்பில் தான் வீண் புகார் கூறியுள்ளார். ஜூனியர் உலகக் கிண்ணத் தொடரில் அவரது செயல்பாட்டை பார்த்தால் உண்மை தெரிய வரும். தகுதியின் அடிப்படையில் அவருக்கு அணியில் இடம் அளிக்க முடியாது.

கடந்த 20 ஆண்டுகளாக பயிற்சியாளராக இருந்துள்ளேன். எனது நேர்மை பற்றி யாரும் கேள்வி எழுப்பியதில்லை. அனைவரும் ஒரு தந்தையைப் போலத் தான் என்னை பார்த்தனர். மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், பயிற்சியாளர் பதவியை தொடர முடியாது. அதனால்தான் பதவியை ராஜிநாமா செய்கிறேனென்றார்.

சமீபத்தில்தான் சென்னையில் நடந்த ஹொக்கிப் போட்டியில் வீரர் ஒருவர் மைதானத்தில் வைத்து நடுவரின் மண்டையை உடைத்தார். இந்த நிலையில் மகளிர் ஹொக்கி அணியில் செக்ஸ் தொல்லை புகார் எழுந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் வீடியோகிராபர் பசவராஜ் பல்வேறு பெண்களுடன் உல்லாசமாக இருப்பது போன்ற வீடியோவும் வெளியாகி பரபரப்பைக் கூட்டியுள்ளது. அதில் பெண்களைக் கட்டிப் பிடிப்பது, முத்தமிடுவது, நெருக்கமாக அமர்ந்திருப்பது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பெண்கள் விபசாரம் செய்பவர்களெனக் கூறப்படுகிறது. இந்திய ஹொக்கிக்கு பெரும் தலைக்குனிவை இந்த சம்பவம் ஏற்படுத்தியுள்ளதால் இதில் மேலும் பல விவகாரங்கள் வெளியாகி பரபரப்பைக் கூட்டுமெனத் தெரிகிறது.

கலைக்கப்பட்ட இந்திய ஹொக்கி கூட்டமைப்பின் தலைவராக இருந்த கே.பி.எஸ். கில் கூறுகையில்;

"நான்கு பேர் கொண்ட குழுவின் விசாரணை என்பது வெறும் கண்துடைப்பு. இதன் முடிவில் எதுவுமே நடக்கவில்லை என்று கூறுவர். எனவே, பொலிஸ் விசாரணை நடத்துவது தான் சிறந்தது. பயிற்சியாளர் மீதான புகாரை, பொலிஸ் வசம் ஒப்படைக்க வேண்டும்" என்றார்.

பெண்கள் அணிக்கு, ஆண் பயிற்சியாளரை நியமிப்பது தான் பிரச்சினைக்கு முதல் காரணமாக அமைந்துள்ளது. பெண்கள் அணிக்கு, ஒரு பெண்ணையே பயிற்சியாளராக நியமிப்பது தான் சிறந்தது. இந்த முறையை கடைபிடித்தால் மட்டுமே, ஹொக்கிக்கு மீண்டும் அவமானம் ஏற்படாமல் தடுக்க முடியுமென வலியுறுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கால்பந்தாட்ட சூதாட்டம்




உலகக் கிண்ணக் கால்பந்து போட்டிகள் நடந்த காலப்பகுதியில் அதனை வைத்துச் சட்டவிரோதமாக சூதாட்டம் நடத்திய சம்பவம் தொடர்பில் ஆசியாவில் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டதுடன், சுமார் பத்து மில்லியன் டொலர்கள் பணமும் கைப்பற்றப் பட்டுள்ளது.

சர்வதேச பொலிஸான 'இன்ரபோல்' அமைப்பின் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக இந்த கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களில் பெரும் எண்ணிக்கையிலானோர் சீனாவிலும் தாய்வானிலுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் அப்பகுதிகளில் இயங்கும் குற்றக் கும்பல்களைச் சேர்ந்தவர்களாவர்.

'சோகா 3' என்று பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கையில் சட்டவிரோதமாக சூதாட்டம் நடக்கும் சுமார் 800 இடங்களில் பொலிஸார் சோதனை நடத்தினர். இந்தச் சூதாட்ட இடங்களில் 155 மில்லியன் டொலர்கள் வரை பந்தயம் கட்டப்படுவது வழக்கமாகும்.

தூர கிழக்கில் பெரும் பந்தயம் முன் வைக்கப்பட்டதையடுத்து உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பித்த ஜூன் 11 ஆம் திகதியன்றே இந்த சோகா நடவடிக்கையும் ஆரம்பித்தது.

பிரான்ஸ் 'இன்ரபோல்' தலைமையலுவலகத்திலிருந்து சீனா, ஹொங்கொங், மக்காவ், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய இடங்களிலுள்ள அதிகாரிகளுடன் இந்த நடவடிக்கை ஒருங்கிணைக்கப்பட்டது.

பத்து மில்லியன் டொலர்கள் பணம், கார்கள், வங்கிக்கடன் அட்டைகள், கணினிகள், செல்லிடத் தொலைபேசிகள் ஆகிய வற்றை அவர்கள் பறிமுதல் செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் குற்றக் கும்பல்களுடனும் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் விபசாரம் ஆகியவற்றுடனும் தெளிவான தொடர்பைக் கொண்டிருந்தார்கள்.

இந்த மாதிரியான நடவடிக்கையில் தூர கிழக்கிலுள்ள பல காவல்துறை அமைப்பினர் மிகவும் நெருக்கமாகச் சேர்ந்து செயற்பட்டது இது தான் முதற்தடவை என்று வியோனில் உள்ள இன்ரபோல் பிரிவின் தலைமை இயக்குநர் தெரிவித்தார்.

இந்தச் சட்டவிரோதப் பந்தயங்கள் இணையம் மற்றும் தொலைபேசிகள் மூலமே மேற்கொள்ளப்பட்டதாக 'இன்ரபோல்' கூறுகிறது.

ஆனால், இந்தச் சூதாட்டதாரிகள் போட்டியில் நடந்த எந்தவொரு ஆட்டத்தின் முடிவிலாவது ஏதாவது செல்வாக்கைச் செலுத்தினார்களா என்பது குறித்து இது வரை எதுவும் தெரியவில்லை.

ஆட்டங்களின் முடிவுகள் முன்கூட்டியே தீர்மானிக்கபட்டனவா அல்லது எந்தவொரு ஆட்டக்காரர் மீதாவது செல்வாக்குச் செலுத்தப்பட்டதா என்பது குறித்து இப்போதே பேச முடியாதென்று இன்ரபோல் கூறுகிறது.


ஆனால், தமது விசாரணைகளில் அது குறித்தும் அடிப்படையில் விசாரிக்கப்படுமென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.




# சாதனை வீரர் கோனர்ஸ்

அமெரிக்காவைச் சேர்ந்த ஜிம்மி கோனர்ஸ் உலகின் தலைசிறந்த டெனிஸ் வீரராக விளங்கியவர். 8 ஒற்றையர் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ள இவர் 2 இரட்டையர் பட்டத்தையும் வென்றுள்ளார்.

அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணத்தில் 1952 ஆம் ஆண்டு செப்டெம்பர் 2 ஆம் திகதி பிறந்த இவர் சிறுவயது முதலே டெனிஸ் விளையாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் விளங்கினார். 1970 ஆம் ஆண்டு தனது 18 ஆவது வயதில் சர்வதேசப் போட்டிகளில் விளையாடத் தொடங்கினார்.



டெனிஸ் தரவரிசையில் 1974 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி உலகின் நம்பர் 1 இடத்தைப் பிடித்தார். 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு 29 ஆம் திகதி வரை தொடர்ந்து 160 வாரங்கள் நம்பர் 1 இடத்தைத் தக்கவைத்துக் கொண்ட பெருமை அவருக்குண்டு. அதற்கு முன்னர் தொடர்ந்து இவ்வளவு நீண்டகாலம் முதல் இடத்தில் யாரும் இருந்ததில்லை.

மேலும், தரவரிசையில் அவ்வப்போது முன்னுக்கு வருவதும் பின்னுக்குச் செல்வதுமான தனது டெனிஸ் வாழ்வில் மொத்தம் 268 வாரங்கள் உலகின் நம்பர் 1 இடத்திலிருந்துள்ளார். அதன் பின்னர் 2007 ஆம் ஆண்டு ரோஜர் பெடரர் 160 வாரங்களுக்கும் அதிகமாக தொடர்ந்து முதல் இடத்திலிருந்து அவரது சாதனையை முறியடித்தார்.

1974 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓப்பன் டெனிஸ் போட்டியிலும் 1974 மற்றும் 1982 ஆகிய ஆண்டுகளில் விம்பிள்டன் டெனிஸ் போட்டியிலும் 1974, 1976, 1978, 1982, 1983 ஆகிய ஆண்டுகளில் அமெரிக்க ஓப்பன் டெனிஸ் போட்டியிலும் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார்.

பல்வேறு சாதனைகளைப் படைத்த கோனர்ஸ் பிரெஞ்ச் ஓப்பன் டெனிஸில் மட்டும் கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெறவில்லை.

1996 ஆம் ஆண்டு டெனிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்ற அவர் பிரபல டெனிஸ் வீரர் ஆண்டி ரோடிக்குக்கு பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

## தெரிந்து கொள்ளுங்கள்

# கோல் நாயகன்

பல்வேறு போட்டிகளில் இக்கட்டான தருணங்களில் கோலடித்து இங்கிலாந்து கால்பந்து அணியின் வெற்றிக்கு வித்திட்டவர் முன்னாள் வீரர் ஜிம்மிகிரீவ்ஸ்.

இவர் 1940 ஆம் ஆண்டு பெப்ரவரி 20 ஆம் திகதி இங்கிலாந்தின் கிழக்கு ஹாமில் பிறந்தார். பாடசாலையில் படித்தபோது கால்பந்து விளையாட ஆரம்பித்தார் கிரீவ்ஸ்.

பல்வேறு போட்டிகளில் சிறப்பாக விளையாடிய எதிரணியை திணறடிக்கும் வல்லமை படைத்தவராக உருவெடுத்தார். அதன் பலனாக 1957 ஆம் ஆண்டு செல்சியா கிளப் அணிக்காக விளையாடும் வாய்ப்புக் கிட்டியது.

1959 ஆம் ஆண்டு நடைபெற்ற லீக் போட்டிகளில் சிறப்பாக விளையாடி செல்சியா அணிக்கு வெற்றிக்களைத் தேடித்தந்ததோடு, அந்த அணியில் அதிக கோலடித்தவராகவும் திகழ்ந்தார்.

அதே ஆண்டில் இங்கிலாந்து தேசிய அணியிலும் இடம்பிடித்தார். 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்ற இங்கிலாந்து அணியில் விளையாடினார். தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்து அணி சம்பியன் பட்டம் வெல்வதற்கு முக்கிய காரணமாக இருந்தார்.

1967 ஆம் ஆண்டு ஆஸ்திரியாவுக்கு எதிரான போட்டியோடு இங்கிலாந்து தேசிய அணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால், பல்வேறு கிளப் அணிகளுக்காக தொடர்ந்து விளையாடினார்.

இங்கிலாந்து அணிக்காக 57 போட்டிகளில் விளையாடி 44 கோல்கள் அடித்துள்ளார். செல்சியா, மிலன், டோட்டன்ஹாம் ஹாட்ஸ்புர், மேற்கு ஹாம் யுனைடெட், பிரன்ட்வுட் டவுன், கெல்ஸ்ம்ஸ் போர்ட் சிற்றி, பார்னெட் ஆகிய கிளப் அணிகளுக்காக 584 போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 382 கோல்கள் அடித்துள்ளார்.

இளம் வயதில் ( 20 வயது) லீக் போட்டிகளில் 100 கோல்கள் அடித்த இங்கிலாந்து வீரர் என்ற பெருமையையும் பெற்றார். இங்கிலாந்து அணியின் அதிக கோல்கள் அடித்த வீரர்கள் வரிசையில் 3 ஆவது இடத்தைப் பெற்றார்.

கால்பந்து போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் ''மை வேர்ல்ட் சொக்கர் 1966'' ''திஸ் வன்ஸ் ஒன் மி'', ''தி பாஸ்'' என கால்பந்து தொடர்பான பல புத்தகங்களை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியாவில் பலப்பரீட்சையில் இறங்கியுள்ள அமெரிக்காவும் சீனாவும்

உலக வலம்

ச.துஷ்யந்தினி

கொரியப் பிரச்சினையை மையமாக வைத்து அமெரிக்காவும் சீனாவும் தனது பலத்தை வெளிப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளன.

நாளை 25ஆம் திகதி கொரியக் குடாவின் கிழக்குக் கரையோரத்தில் அமெரிக்காவும் தென்கொரியாவும் கூட்டாக கடற்படை மற்றும் விமானப்படைப் பயிற்சிகளை நடத்தவுள்ளதாக அறிவிப்பு வெளியாகியிருந்தது.



மோதல் தவிர்ப்பு வலயத்தின் தென்கொரிய பகுதியிலுள்ள அவதானிப்பு நிலையத்திலிருந்து வடகொரியாவை உற்றுநோக்கும் ஹிலாரியும் கேட்ஸும்.

இப் பயிற்சி நடவடிக்கை வடகொரியாவின் எதிர்காலத் தாக்குதல்களைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டதென இவ்விரு நாடுகளும் தெரிவிக்கின்ற நிலையில் இப் பயிற்சி நடவடிக்கை தனது நாட்டை இலக்கு வைப்பதாக சீனா கருதுகிறது.

அமெரிக்க-தென்கொரியக் கூட்டுப் பயிற்சி சீனாவின் நுழைவாயிலாகக் கருதப்படும் மஞ்சள் கடற்பகுதியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பதன் மூலம் அமெரிக்கா தனது பலத்தை வெளிப்படுத்த விரும்புவதாக சீனா தெரிவித்துள்ளது.

ஆனால் இதனை நிராகரித்துள்ள அமெரிக்கா இது வழமையான பயிற்சி நடவடிக்கையே எனத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் பயிற்சி நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்னரேயே இருநாள் பயிற்சி நடவடிக்கையொன்றை மஞ்சள் கடல் பகுதியில் ஹெலிகொப்டர்கள், நீழ்மூழ்கிக் கப்பல்கள் சகிதம் சீனா கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்திருந்தது.

துருப்புகளின் ஊடுருவலைத் தடுப்பது, அவசர நிலைமைகளை எவ்வாறு கையாள்வது? மற்றும் நீண்ட தூர தாக்குதல்களை எவ்வாறு தடுப்பது போன்றவற்றிற்கான ஒத்திகையாக சீனாவின் பயிற்சி நடவடிக்கைகள் அமைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த மார்ச்சில் 46 வீரர்களுடன் தென்கொரியப் போர்க்கப்பல் மூழ்கியதைத் தொடர்ந்து கொரியப் பிராந்தியத்தில் அதிகரித்து வந்த பதற்றம் தற்போது தீவிரமாகியுள்ளது.

வடகொரியாவின் தாக்குதலினாலேயே தென்கொரியக் கப்பல் மூழ்கியதாக தென்கொரியாவும் சர்வதேச விசாரணைக் குழுவொன்றும் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் இதனை தொடர்ச்சியாக வடகொரியா மறுத்துவரும் அதேவேளை சர்வதேச விசாரணைக் குழுவின் முடிவுகளை சீனாவும் ஏற்க மறுத்துள்ளது.

வடகொரியாவின் ஒரேயொரு நட்பு நாடாக விளங்கும் சீனாவின் இராணுவப் பலம் அதிகரித்து வருவதும் பாதுகாப்புச் செலவினங்களுக்கான தொகையை அதிகரித்துள்ளதும் ஆசியாவில் சீனா வல்லரசாக மாறி வருகிறது என்ற அச்சத்தை உலகத் தலைவர்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் வடகொரியாவுக்கு சார்பாக சீனா செயற்படுகின்றமையால் சீனாவின் நடவடிக்கைகள் தொடர்பில் அனைத்துத் தரப்பும் அதிருப்தியடைந்துள்ளன.

இந்நிலையில் வடகொரியாவுக்கெதிரான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் முக்கிய உயர்மட்ட சந்திப்பொன்றுக்காக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டனும் பாதுகாப்பு அமைச்சர் ரொபேர்ட் கேட்[ஸும்] இவ்வார நடுப்பகுதியில் தென் கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

தென்கொரியாவை வந்தடைந்த இரு உயர்மட்ட இராஜதந்திரிகளும் இரு கொரியாக்களுக்குமிடையிலான எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மோதல் தவிர்ப்பு வலயத்திற்கு விஜயம் மேற்கொண்டதுடன் தென்கொரிய எல்லையில் இருந்தவாறு தொலைநோக்கியூடாக வடகொரியாப் பகுதிகளைப் பார்வையிட்ட காட்சிகளை உள்ளடக்கிய புகைப்படங்களும் ஒளிப்பதிவு நாடாக்களும் சர்வதேச ரீதியில் ஊடகங்களில் பரபரப்பாக வெளியிடப்பட்டன.

வடகொரியத் துருப்புகள் நிலைகொண்டிருந்த பகுதியிலிருந்து சில மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள தென்கொரிய எல்லைப்பகுதியில் இவ் உயர்மட்ட இராஜதந்திரிகள் தோன்றிய காட்சி அனைவரையும் அதிச்சியடைய வைத்தது.

தமது நேச நாடான தென்கொரியாவுக்கு தமது உறுதியான ஆதரவை வெளிப்படுத்த விரும்புவதாக கேட்ஸ் இங்கு செய்தியாளர்களுக்கு தெரிவித்த அதேவேளை மற்றொரு பாதை உண்டென்பதை வடகொரியா புரிந்து கொள்ள வேண்டுமென்பதே தமது விருப்பமென ஹிலாரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் 1950–1953 கொரியப் போரின் பின்னர் தென்கொரியா அசாதாரணமான வகையில் முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் ஆனால் வடகொரியர்கள் பல வருடங்களாக துன்பத்தை அனுபவித்து வருவதாகவும் இங்கு ஹிலாரி குறிப்பிட்டுள்ளார்.

மூன்று வருட கொரியப் போரை முடிவுக்கு கொண்டு வரும் முகமாக 1953 இல் தற்காலிக போர் நிறுத்த உடன்படிக்கையொன்று இரு கொரியாக்களுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட போதும் இரு நாடுகளுக்குமிடையில் அமைதி உடன்படிக்கையொன்று இதுவரை கைச்சாத்திடப்படவில்லை.

ஆனால் போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதிலிருந்து ஆயிரக்கணக்கான அமெரிக்கத் துருப்புகள் தென்கொரியாவில் நிலைகொண்டிருக்கும் அதேவேளை அடிக்கடி இரு கொரியாக்களும் பல்வேறு விடயங்களில் முரண்பட்டே வருகின்றன.

இதற்கிடையில் வடகொரியா அணுவாயுதத் திட்டத்தை முன்னெடுப்பதும் மேற்குலக நாடுகளின் கோபத்திற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது.

சர்ச்சைக்குரிய இவ் அணு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ஐ.நா.வின் பல்வேறு தடைகளை வடகொரியா எதிர் நோக்கியுள்ள நிலையில் தற்போது அமெரிக்காவும் புதிய தடைகளை அறிவித்துள்ளது.

இத் தடைகள் வடகொரியாவின் ஆயுத விற்பனை மற்றும் கொள்வனவு அணுவாயுத நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்களை தடுத்தல் போன்றவற்றை இலக்கு வைத்திருப்பதாக ஹிலாரி கூறியுள்ளார்.

தென்கொரியாவின் பாதுகாப்பு மிகவும் வலுவான நிலையில் உள்ளது என்பதை உலகுக்கு வெளிப்படுத்தும் முகமாகவே தாம் இவ் விஜயத்தை மேற்கொண்டிருப்பதாகக் கூறியுள்ள கேட்ஸ் தமது இராணுவக் கூட்டணி முன்னெப்போதும் இல்லாத வகையில் எந்தவொரு ஆக்கிரமிப்பையும் தடுப்பதற்கேற்ற பலத்துடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே அமெரிக்க-தென்கொரிய உயர்மட்ட இராஜதந்திரிகள் மற்றும் இராணுவத் தளபதிகள் கலந்து கொள்ளும் பாதுகாப்பு விவகாரம் குறித்த உயர்மட்ட சந்திப்பு தென்கொரியாவில் நடைபெற்றுள்ளது.

இச் சந்திப்பைத் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறும் கூட்டு இராணுவப் பயிற்சியில் அணுவாயுத விமானம் தாங்கிக் கப்பல், ஏனைய 20 போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், 100 விமானங்கள் மற்றும் 8 ஆயிரம் துருப்புகள் என்பன ஈடுபடுத்தப்படவுள்ளன.

மஞ்சள் கடல் பகுதியில் வெளிநாட்டு இராணுவ நடவடிக்கையை சீனா தொடர்ச்சியாக எதிர்த்து வரும் அதேவேளை இப் பயிற்சியை வடகொரியாவும் கடுமையாக விமர்சித்துள்ளது.

கொரியக்குடாவை மையமாக வைத்து அமெரிக்காவும் சீனாவும் தமது பலப்பரீட்சையை நடத்தி வரும் நிலையில் தற்போதைய நிகழ்வுப் போக்குகள் போரொன்று ஏற்படுவதற்கான சாத்தியங்களை அதிகரித்துள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.





தென்கொரியாவில் போருக்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டமொன்று...

ஆனால் இரு கொரியாக்களுக்குமிடையில் போரொன்று ஏற்படும் பட்சத்தில் அதன் தாக்கம் கொரியப் பிராந்தியத்திற்கு அப்பாலும் எதிரொலிக்கும் என்பதையே தற்போதைய நிகழ்வுகள் வெளிக்காட்டி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











நயன்தாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.